# உதயன்

விலை ரூபா 6-00

சுகர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 பங்குனி 18 வியாழக்கிழமை (01-04-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 107


## அமெரிக்காவின் மியாமி நகர் மீது யூகோ. விமானம் அணுகுண்டு வீச்சு

### பல்லாயிரக்கணக்கானோர் பலி!!

பிந்திய செய்தி

பெல்கிரேட், ஏப்ரல் 1

அமெரிக்காவின் கரையோரப் பகுதி நகரான மியாமி மீது யூகோஸ்லாவிய விமானங்கள் இன்று அதிகாலை அணுகுண்டுத் தாக்குதல் நடத்தி இருப்பதாக செய்தி அச்சுக்குப் போகும்போது கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

கடந்த எட்டு நாள்களாக நேட்டோ படைகளின் தொடர்ச்சியான விமானத் தாக்குதல்களை எதிர்கொண்டு போராடி வந்த யூகோஸ்லாவியா, அணு குண்டுத் தாக்குதல் மூலம் அமெரிக்காவுக்குப் பதிலடி கொடுத்தது உலகம் முழுவதையும் பெரும் அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

இலங்கை நேரப்படி இன்று அதிகாலை ஒரு மணி அளவில் — ஜி. எம். ரி.

(11 ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணி விசாரணை கொழும்பு நீதிமன்றத்தில்

### இன்று நடைபெறும்

கொழும்பு, ஏப்ரல் 1

பெரும் சர்ச்சையைத் தோற்றுவித்திருக்கும் செம்மணிப் புதைகுழி விவகாரம் இன்று கொழும்பு நீதிமன்றத்தில் யாழ். மேலதிக நீதிவான் என். அருள்சாகரன் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்படவிருப்பதாக சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

செம்மணிப் புதைகுழி தொடர்பாக இரகசியப் பொலீஸாரால் யாழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை கடந்த மாதம் 5 ஆம் திகதி யாழ். மேலதிக நீதிவான் என். அருள்சாகரன் முன்னிலையில் நடைபெற்று மேல் விசாரணை கடந்த 26 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டதும்—

அன்றைய விசாரணைக்கு கொழும்பில் இருந்து நீதிவான் வராததால் விசாரணை எதுவும் இடம்பெறாததும்— தெரிந்தவையே.

இந்த மனு மீதான விசார

[12 ஆம் பக்கம் பார்க்க]

# உயிலங்குளம் வழி ஊடாக வன்னிக்கு வாகன அணி!

## புலிகள் - படைத்தரப்பு இணக்கம்

வவுனியா, ஏப்ரல் 1

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்துக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை எடுத்துச் செல்லும் வாகன அணி உயிலங்குளம் பாதை ஊடாகச் செல்ல இணக்கம் ஏற்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து நாளை மறுதினம் முதல் இந்தப் பாதை ஊடாக வாகன அணிகள் வன்னிக்குச் செல்ல உள்ளன.

வன்னி இராணுவத் தலைமையகத்தில் வன்னிப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லவுடன் மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி அரச அதிபர்கள் நேற்று நடத்திய பேச்சுக்களில் ஏற்பட்ட இணக்கநிலையை அடுத்தே உயிலங்குளம் ஊடாகச் செல்ல வாகன அணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வாகன அணி செல்லும் பாதை தொடர்பாக எழுந்த இழுபறி நிலையால் கடந்த சில வாரங்களாக வன்னிக்கு உணவுப் பொருள்கள் எடுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்ரல். 1

கரந்தன் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தில் இறந்ததாகத் தெரிவித்து, கோப்பாய் பொலீஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இனந்தெரியாத சடலம் இனம் காணப்பட்டுள்ளது.

உரும்பிராய் வடக்கு, மடத்தடிப் பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை ஜெகன் (வயது 23) என்பவரே இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் ஆவார்.

முறைசாராக் கல்வி மாணவனான இவர் அந்த வீதியால் வந்தசமயம் அப்பகுதியில் இடம்பெற்ற கிரனேட் குண்டுவெடிப்பு மற்றும் துப்பாக்கிப் பிரயோகச் சம்பவத்தின்போது மரணமானதாக உறவினரால் தெரிவிக்கப்பட்டது.

[இ-15-139]

## மல்லிகை வாசத்துடன் உதயன்

உங்கள் அபிமான உதயன் பத்திரிகையின் முன் பக்கமும் கடைசிப் பக்கமும் இன்று முதல் விசேட மல்லிகை வாசம் [சென்ற்] விசிறப்பட்ட காகிதத்தாள்களில் அச்சிடப்படுகின்றன. அதன் நறுமணத்தை ஒரு தடவை நுகர்ந்து மகிழ்ந்து கொள்ளுங்கள்!

## பதவி இழந்த இருவரும் புதிய கட்சி அமைத்தனர்

கொழும்பு, ஏப்ரல் 1

ஈ. பி. டி. பி. அமைப்பின் சார்பில் சுயேச்சைக் குழுவில் போட்டியிட்டு யாழ். மாவட்ட எம். பியாகி உயர் நீதிமன்ற உத்தரவால் பதவி இழந்துள்ள இ. இராமேஸ்வரனும் இவரது சகோதரர் இ. இராமமூர்த்தியும் புதிய கட்சி ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

'மக்கள் ஜனநாயகப் பேரவை' என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தக் கட்சியின் தலைவராக இ. இராமேஸ்வரனும், கட்சியின்

(11 ஆம் பக்கம் பார்க்க)

## யூகோ. மீதான தாக்குதலை நிறுத்த கோரி வவுனியாவில் நேற்றுப் பேரணி

### புளொட் அமைப்பின் ஏற்பாட்டில்

வவுனியா, ஏப்ரல் 1

யூகோஸ்லாவாக்கியா மீது நேட்டோ படைகள் நடத்தும் தாக்குதல்களைக் கண்டித்து வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது

புளொட் அமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா பள்ளிவாசலில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணியில் பொது அமைப்புக்களைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

நகரின் பல பகுதிகள் ஊடாகச் சென்ற பேரணி வவுனியா செயலகத்தில் முடிவடைந்து அங்கு வைத்து இலங்கை ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் ஒன்று மேலதிக அரச அதிபர் எஸ். ரகுநாதபிள்ளையிடம் கையளிக்கப்பட்டது.

நேட்டோ படைகளின் தாக்குதலை நிறுத்துமாறு அமெரிக்க ஜனாதிபதியை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## எளிமையான முறையில் செல்வா பிறந்ததின நிகழ்வு

யாழ்ப்பாணம் ஏப்ரல் 1

தந்தை செல்வாவின் 101 ஆவது பிறந்த தின நிகழ்வு நேற்று எளிமையான முறையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ். கோட்டைப் பகுதியில் உள்ள தந்தை செல்வா நினைவுத் தூபியில் நேற்றுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மடுத் தேவாலயப் பகுதியில் உள்ள மக்கள் பெரும் அதிருப்தி நிலையில்!

### பங்குத்தந்தை தெரிவிப்பு

மன்னார், ஏப்ரல் 1

மன்னார் மடுமாதா தேவாலயப் பிரதேசத்தில் தங்கியுள்ள மக்கள் வெளியிடங்களுக்குச் செல்ல படையினர் விதித்துள்ள கட்டுப்பாடுகள் காரணமாக அதிருப்தியுடன் காணப்படுகின்றனர்.

மடுத் தேவாலயப் பங்குத்தந்தை வண. அ. தேவசகாயம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மடுவில் தங்கியுள்ள மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

படையினர் அமுல் செய்துள்ள நடைமுறைகளால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்-

40 வயதுக்கு மேற்பட்டவர்களை மட்டுமே மன்னாருக்கும் வவுனியாவுக்கும் சென்று வர படையினர் அனுமதிக்கின்றனர்.

மன்னார், வவுனியா ஆகிய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் மீனவர் ஒருவர் காயம்

### குருநகர் கடலில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகிப் படுகாயமடைந்தார்.

குருநகர் கடற் பிராந்தியத்தில் அந்தரப்பிட்டி என்ற பகுதியில் நேற்றுக்காலை இந்

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## வை. செல்லத்துரை

மட்டுவில் வடக்கு மந்திரியார் வளவைச் சேர்ந்த
வை. செல்லத்துரை 31-03-1999 புதன்கிழமை காலமா
னார்.
அன்னார் சாவகச்சேரி நகரசபை முன்னாள் நூலக
உதவியாளரும் காலஞ்சென்ற சிங்கப்பூர் ஒய்வூதியர்
யோகம்மாவின் அன்புத் தம்பியும் உடுவில சிவபூர
ணத்தின் பாசமிகு கணவரும் ஏகபுத்திரி கிரியாதேவி
யின் அன்புத் தந்தையும் ஸ்ரீஸ்கந்தராசாவின் மாமனா
ரும் கோகிலன், பிரதாபன் ஆகியோரின் அன்புப்
பாட்டனாரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [01-04-99]
வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் அவரது
இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மட்டுவில் குடும்ப
மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவிததலை உற்றார், உறவினர், நண்பர்
கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
செ. சிவபூரணம் [மனைவி]
செ. கிரியாதேவி [மகள்]

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
[64391]

## கந்தையா சரவணமுத்து

காரைநகர், வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும்,
சத்திரந்தை களபூமியில் வசித்தவரும் தற்போது மலே
சியாவில் வசித்தவருமாகிய கந்தையா சரவணமுத்து
அவர்கள் 26-3-99 இல் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற சின்னம்மாவின் அன்புக்
கணவரும் சிவராசா, திருமதி செல்வராசா, பால
தேவி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் செல்வ
ராசா, லீலாவதி ஆகியோரின் மாமனாரும் கமலா
கரனின் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27-3-99 அன்று
மலேசியாவில் நடைபெற்றன.

தகவல்:
க. சுப்பிரமணியம்
(தம்பி)

64/1, வைமன் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
[64386]

திருமதி
## சிறிஸ்காந்தன் சாசினி (சசி)

யாழ்ப்பாணம ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாக
வும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட
திருமதி சிறிஸ்காந்தன் சாசினி 27—03—99 இல் சுவி
ஸில் காலமாகிவிட்டார்.
அன்னார் ஞானப்பிரகாசம் தம்பதிகளின் மகளும்,
சிறிஸ்காந்தனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற
சென்னத்தின் தாயாரும், காலஞ்சென்ற நாகேந்திரம்
—இராசலட்சுமி தம்பதிகளின் மருமகளும், சந்தான
லட்சுமி, தனலட்சுமி (கண்டி), லட்சுமிகுமாரி ஆகி
யோரின் மைத்துனியும், மயில்வாகனம், பேரானந்
தன் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகி
யோரின் மருமகளும் ஆவார்.
அன்னாரது இறுதிக்கிரியைகள் 31—03—99 இல்
சுவிற்சர்லாந்தில் நடைபெற்றன.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்
கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்
கொள்கின்றோம்

தகவல்:
ச. பேரானந்தன்
(மாமன்)

535, (999), காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.
(64369)

## கனகசபை செல்வரத்தினம்
(இரத்தினம்)

இன்பருட்டி பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக்
கொண்ட காலஞ்சென்ற கனகசபை அவர்களின்அன்பு
மனைவி செல்வரத்தினம் அவர்கள் 30-03-99 செவ்
வாய்க்கிழமை திருச்சியில் காலமானார்.
அன்னார் செல்லப்பாக்கியம் (திரவியம்-திருச்சி)
தெய்வநாயகி (சிவப்பு-இன்பருட்டி), திருச்சியில் வசிப்
பவர்களான அருமைத்துரை, சிவாநந்தன், சச்சி
தானந்தன் (சச்சி), நித்தியானந்தன் (ஆனந்தன்)
ஆகியோரின் அன்புத் தாயாரும் க. இராமச்சந்திரன்
(திருச்சி), க. குருசாமி (இன்பருட்டி), திருச்சியில்
வசிப்பவர்களான சிவதேவி (பலர்-நாகர்கோவில்),
புனிதமாலா, யோகாம்பிகை (நவம்-ஐயனார்கலட்டி),
லீலா ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி வ.
சிவக்கொழுந்து (இன்பருட்டி), மு. சுப்பிரமணியம்
(இன்பருட்டி), மு. தங்கவேலாயுதம் (சென்னை) ஆகி
யோரின் அன்புச் சகோதரியும், ஜெயலோகநாதன்—
அம்பிகா (நோர்வே-மாமுனை), உதயகுமார்-அகிலா
(சுவிஸ்), சிவதாஸ்-ரங்கா (நோர்வே), முருகதாஸ்—
கீதாலட்சுமி (நோர்வே), காந்தி-ராதிகா (நோர்வே),
யோகேஸ்வரன் - தேவிகா (இத்தாலி-தம்பகாமம்),
நிஷாந்தன், கனகராசா (நோர்வே), மாதவன்-கிரிஜா
(நோர்வே), மதிமுகராசா, வரதராசா, அருளானந்த
ராசா, கமலராசா, ராஜ்குமரன் (நோர்வே), சதீஸ்
குமரன், செல்வக்குமரன், தினேஷ்குமரன், கார்த்திக்,
பாலகிருஷ்ணன் (நோர்வே), ரூபி, வனஜா, அனுஷியா,
கௌரி, செந்தூரன், மயூரன், பிரசாந்தன், நித்தியா
ஆகியோரின் அன்புப் போததியும், அகல்யா, சிந்துஜா,
சதீஸ்குமார், சுதர்சன், துஷ்யந்தன், சுதா, நிரோஷன்,
தர்ஷன், நிதர்ஷன், நிதர்ஷிகா, லாவண்யா ஆகி
யோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் (31-03-99) நேற்று
புதன்கிழமை திருச்சியில் நடைபெற்றன.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்
பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. குருசாமி
(மருமகன்)

இன்பருட்டி,
பருத்தித்துறை.
(64371)

## மலேசிய ஓய்வூதியம்

யாழ். மாவட்டத்தில்
இருந்து பர்மா, சிங்கப்பூர்,
மலேசியா ஒய்வூதியம் பெறு
பவர்களின் மார்ச் மாதத்திற்
குரிய ஒய்வூதிய வவுச்சர்களும்
காசோலைகளும் யாழ். செய
லக ஒய்வூதியப் பிரிவினரால்
நேற்று அந்தந்த வங்கிகளுக்கு
அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.
உரியவர்கள் இன்றுமுதல்
தத்தமது வங்கிகளுக்குச்
சென்று தமது ஒய்வூதி
யத்தைப் பெற்றுச் செல்லு
மாறு கேட்கப்பட்டுள்ளனர்.


லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
இன்று
விஜய் - ரம்பா - மகேஸ்வரி
நடித்த
என்றென்றும்
காதல்
மகத்தான புதிய வெளியீடு
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
FAX No. 070 - 212223
FOREIGN T.P No
0094 - 70-212223
(சி/6992)

நாகம்ஸ்
சுன்னாகம்.
கடைசி வெற்றி வாரமாக
விஜய், விஜயகாந்த்,
யுவராணி, கௌதமி
நடித்த
செந்தூரபாண்டி
புதிய நேரப்படி காட்சிகள்
10-30, 2-30
(64264)

ராஜா
யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
ராஜ்கிரன் - மீனா
ஸ்ரீவித்தியா - வடிவேல்
செந்தில் - கவுண்டமணி
மற்றும் பலர் நடித்த
என்
ராசாவின்
மனசிலே
இன்று காட்சிகள்
10-30, 2-30.
புதுவருட வெளியீடு!
நாளை முதல்
காதலே
நிம்மதி
(சி/6963)

வணிகக் கல்வி
எனது வகுப்புக்கள்
02 - 04 - 99 இல் இருந்து
வழமை போல் நடைபெறும்.
ஆசிரியர்:
V. முரளி
(64388)

இன்றைய பிரமிட்
வீடியோ CD வெளியீடு!
கார்த்திக்-ரோஜா நடித்த
சின்னராஜா
ஓடியோ CD
விற்பனைக்கு உண்டு
★ படையப்பா
▲ ஓடியோ கசட் குறைந்த
விலையில் விற்பனைக்கு
உண்டு. (புதிய பாடல்கள்)
வீடியோ விஷ்ணு
[illegible] வீதி,
கோண்டாவில்.
(64389)

திறப்பு விழா
சதா பொன்ஸ்
தனது சேவையில்
இன்று [01-04-99] காலை 9-00 மணி முதல்
போட்டோ பிரதி சேவையையும்
இணைத்துக் கொள்கின்றது என்பதனை மகிழ்ச்சி
யுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
சதா பொன்ஸ்
அல்வாய்.
(சி/6994)


# மரண அறிவித்தல்கள்

## சின்னராசா சிவாகரன்

(களஞ்சியப் பொறுப்பாளர், வி. எஸ். பி. குறூப்)
பிடாரி அம்மன்கோயிலடி, ஆனைக்கோட்டை
யைச் சேர்ந்த சின்னராசா சிவாகரன் 30- 03- 99
அன்று கொழும்பில் காலமானார்.
அன்னாரின இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம்
பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வி. எஸ். பி. குறூப்
(சி/6989)

யாழ்ப்பாணம்.

## விசுவலிங்கம் சின்னத்தங்கச்சி

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட
விசுவலிங்கம் சின்னத்தங்கச்சி நேற்று (31 - 03 - 99)
காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற விசுவலிங்கத்தின் அன்பு
மனைவியும் பாலசிங்கம், பாலரத்தினம், காலஞ்
சென்ற பத்மநாதன், தில்லைநாதன், பத்மாவதி,
பரமேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தாயாரும்
டாக்டர் அருமைத்துரை (வைத்திய அதிகாரி, நவாலி,
மானிப்பாய்), க. கமலநாதன் (பாதுகாப்பு உத்தி
யோகத்தர், யாழ். பல்கலைக் கழகம்), கனகபூசனி,
உதயமலர், சண்முகவடிவு, காலஞ்சென்ற தயாநிதி
ஆகியோரின் அன்பு மாமியாரும் சுதர்சன், சுபாஸ்,
சுபாசினி, அரிகரன், ஜெயதீபன், கார்த்தீபன்,
காலஞ்சென்ற பிரதீபன், சிந்துஜா, கபிலன், கபிலா,
கஸ்தூரி, கஜிபன், விலாசித்தா, சோபனா ஆகியோ
ரின் அன்புப் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01-04-99)
வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று
பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பகல் 11 மணியளவில்
தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்
படும்.

தகவல்:
Dr. அருமைத்துரை
(மருமகன்)

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்
(63845)

திருமதி
## வள்ளிப்பிள்ளை அரியகுட்டி

கரம்பகமைப் பிறப்பிடமாகக் கொண்ட, தற்போது
கச்சார்வெளி, பளையை வதிவிடமாகக் கொண்ட அரிய
குட்டியின் அன்பு மனைவி வள்ளிப்பிள்ளை 31-03-99
அன்று காலமானார்.
இவர் முத்துக்குமாரு (உணவுத்துறை களஞ்சியம்,
காங்கேசன்துறை), காலஞ்சென்றதேவி, காலஞ்சென்ற
மகாலிங்கம், பூலோகம் [பிரான்ஸ்], செங்கமலம் ஆகி
யோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற இராசலட்
சுமி [ஆசிரியர், கரவெட்டி], சங்கரதாஸ், கதிரமநாதன்
[பிரான்ஸ்], சோமசுந்தரம ஆகியோரின் அன்பு மாமி
யாரும், ரவீந்திரன் [பிரான்ஸ்], யசோதினி, ரசிதாஸ்,
யாளினி, பிரபாகரன், பிரதீபா, ரமேஸ்வரன், கோபிகன்
பிருந்தா, கஜீனா [பிரான்ஸ்], தருமகரன் [பிரான்ஸ்]
ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அனுசன், றம்சியா
ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [01-04-99]
வியாழக்கிழமை பி ப. 2 மணிக்கு நடைபெறும் என்
பதை அறியத்தருகிறோம்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்
கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்
கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

கச்சார் வெளி,
பளை.
[64397]

## முருகர் கந்தையா

மட்டுவில் வடக்கைச் சேர்ந்த முருகர் கந்தையா
30-03-99 இல் காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற திருமதி செல்லாச்சியின்
அன்புக் கணவரும் லயன் எம். கே ஜீவகதாஸ் [கௌரவ
செயலாளர், அறவழி நிருபர், வீரகேசரி, 'லிங் லென்டிங்
லைபிறறி, உரிமையாளர்], அமரர் க. ஜெகதாஸ் [முன்
னாள் இலங்கைவங்கி ஊழியர்], செல்வி க. ஜெகஜோதி
ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் திருமதி ஈஸ்வரி
ஜீவகதாஸின் [மக்கள் வங்கி, சாவகச்சேரி] அன்பு
மாமனாரும் செல்வன் ஜீ. சஞ்ஜீவனின் [இந்துக் கல்
லூரி, சாவகச்சேரி] அன்புப் பேரனுமாவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (31-3-99)
நடைபெற்றன.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்
கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எம். கே. ஜீவகதாஸ்
(மகன்)

மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.
(64401)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வல்லுநர்ப் போட்டிகள்

யாழ்ப்பாணம், ஏப். 1

தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் நல்லூர் பிரதேச செயலகக் கிளையின் மெய்வல்லுநர்ப் போட்டிகள் நாளையும் நாளை மறுதினமும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

இதேவேளை—

தெல்லிப்பழைப் பிரதேச செயலகக் கிளையின் மெய்வல்லுநர்ப் போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் இரு தினங்களுக்கு மல்லாகம் கிராம அபிவிருத்திச்சங்க மைதானத்தில் நடைபெறவுள்ளது.

[ஐ-7]

# கீரிமலை, மாவிட்டபுரம் பகுதிகள் புனித பிரதேசமாக்கப்படவேண்டும்

## மாநகரசபைக் கூட்டத்தில் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 1

கீரிமலை நகுலேஸ்வரம், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயப்பகுதிகள் புனிதப்பிரதேசமாக பிரகடனம் செய்யப்பட வேண்டும் என்று யாழ். மாநகர சபை உறுப்பினரும் புளொட் மாவட்ட அமைப்பாளருமான செ. கிருபைராசா யாழ். மாநகர சபைக் கூட்டத்தில் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:

வலிகாமம் வடக்குப் பகுதியிலுள்ள இந்த இரு ஆலயப் பகுதிகளும் புனிதப் பிரதேசமாக்கப்பட வேண்டும்என்று அன்றும் கோரிக்கை விடப்பட்டிருந்தது. ஆனால் இது வரையும் அது நடை முறைக்கு வரவில்லை.

மடுப்பகுதி புனித பிரதேசமாக்கப் பட்டதினால்தான் அங்கு ஆயுதம் தாங்கிய எவரும் நடமாட முடியாத நிலையேற்பட்டுள்ளது. இதே போன்று கதிர்காமம், மிகிந்தலைப் பிரதேசங்களும் புனித பிரதேசமாக்கப்பட்டுள்ளன.

கீரிமலையில் புனித தீர்த்தக்கேணி இருப்பதாலும் மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் வரலாற்றுச் சிறப்பு மிக்க வழிபாட்டுத்தலமாக இருப்பதாலும் நிச்சயம் இப்பகுதிகள் புனித பிரதேசமாக்கப்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

### எஸ். சின்னத்துரை

யாழ். மாநகரசபை உறுப்பினரும் த. வி. கூட்டணி பிரதிநிதியுமான எஸ் சின்னத்துரை உரையாற்றும் போது கூறியதாவது;

தமிழ் மக்களின் புண்ணிய பூமியாகிய கீரிமலை, மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய பகுதிகள் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும். இதற்கு இந்த இடங்கள் புனித பிரதேசமாக பிரகடனம் செய்யப்படுவதுதான் சிறந்த வழியாகும்

இந்த இரு பிரதேசங்களும் புனித பிரதேசமாக்கப்பட்டு ஆயுதம் தாங்கியவர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

யாழ். மாநகரசபை உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரதிநிதியுமான த. சுபத்திரன் உரையாற்றும் போது கூறியதாவது;

ஜனநாயக விரோதிகளினால் தமிழ்த் தலைவர்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இதனால தலைமைகளில் வெற்றிடம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவே இதற்கு மாறாக சரியான தலைமையொன்றினை நாம் கட்டியெழுப்ப வேண்டும்.

யாழ். மாநகர சபையில் இருமேயர்களை அடுத்தடுத்து இழந்து விட்டோம். தொடர்ந்து உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள்.

இந்நிலையில்தான் ஜனநாயக விரோதிகளின் செயற்பாடுகளை முறியடித்து தமிழ் சமூகத்துக்குச் சரியான தலைமையை வழங்கவேண்டிய பொறுப்பு எமக்கு இருக்கிறது.

கடந்த 18 வருடங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தம் தொடர்ந்து அழிவையே ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. இன்னும் சில காலங்களுக்கு யுத்தம் தொடருமானால் சொல்லொணாத் துயரத்தையும் துன்பத்தையும் மக்கள் அனுபவிக்கவேண்டி வரும் - என்று தெரிவித்தார்.

### பிரதிமேயர் உரை

பிரதிமேயர் ந. ரவிராஜ் உரையாற்றும்போது கூறியதாவது:-

தமிழ்மக்களின் உரிமைகளுக்காக ஜனநாயக வழியில் போராடிக்கொண்டிருக்கும் எமது செயற்பாடுகள் எந்த விதத்திலும் மழுங்கடிக்கப்படக் கூடாது.

இரு மேயர்களின் இழப்புக்களாலும் அதனைச் செய்தவர்கள் எதனையும் சாதித்து விடவில்லை. இவர்களை இழக்காமல் இருந்திருந்தால் பெரும் சேவைகளையாவது நாம் சாதித்திருக்கலாம்— என்றார்.

யாழ். மாநகரசபை உறுப்பினரும் ஈ.பி.டி.பி பிரதிநிதியுமான அன்டன் சிவலிங்கம் உரையாற்றும் போது கூறியதாவது:-

யுத்த நிறுத்தம் ஒன்றைச் செய்து அரசும் புலிகளும் பேச்சுவார்த்தை நடத்தும் சந்தர்ப்பத்தை உருவாக்கினால் எமது சபைகளை அச்சுறுத்தல்கள் எதுவுமின்றிச் செயற்படுத்த முடியும்— என்று கூறினார்.

யாழ் மாநகரசபை உறுப்பினரும் த.வி. கூட்டணி பிரதிநிதியுமான செல்லையா விஜயரட்ணம் உரையாற்றும் போது கூறியதாவது:-

யாழ். மாநகரசபை எல்லைக்குள் படையினரால் விடுவிக்கப் படாதிருக்கும் பொதுமக்களின் காணிகள் மற்றும் இருப்பிடங்கள் விடுவிக்கப்படவேண்டும். அத்தோடு பழுதடைந்த வீடுகள் சம்பந்தமான விபரங்கள் சேகரிக்கப்பட்டு நஷ்டஈடு வழங்கவும் திருத்தியமைக்கவும் கொடுப்பனவுகள் வழங்கப்படவேண்டும் — என்று தெரிவித்தார்.

(ஐ— 5)




(சி/ 69 68)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப் 1

மகளிர் அபிவிருத்தி நிலையம் பாடசாலை மட்டத்தில் உயர்தர வகுப்பு மாணவர்களுக்காக நடத்திவரும் — முரண்பாடுகளைத் தீர்த்தல் தொடர்பான சமூக ஒருங்கிணைப்புக் கருத்தரங்குத் தொடரில் இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரியில் கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது.

நிலையப் பணிப்பாளர் சரோஜா சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்தக் கருத்தரங்கில் சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கிருபா வீரசிங்கம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசா, தேசிய கல்வி நிறுவக விரிவுரையாளர் தனலஷ்மி வில்வநாதன், மகளிர் அபிவிருத்தி நிலைய இணைப்பாளர் புஸ்பா சின்னையா ஆகியோர் இந்நிகழ்வில் கருத்துரை வழங்குவர்.

இக்கருத்தரங்கு மாணவர்கள் மத்தியில் சமூக ஒருமைப்பாட்டினையும், முரண்பாடற்ற ஒரு சமூகத்தை உருவாக்கும் நோக்கத்தோடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தால் நடாத்தப்படும் 18 ஆவது கருத்தரங்காகும்.

(உ—3)


## கணிதம் தரம் - 9

புதிய பாடத் திட்டத்திற்கமைவான மேற்படி பாடநூல் [முதல் 20 பாட அலகுகள்] விற்பனையாகின்றன.

பிரதி ஒன்று 110/

தொகையாகப் பெறுவோருக்கு - 100/-

கணித கழகம்
யாழ். மத்திய கல்லூரி.

[64374]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லைடனின்
## புதுவருட விசேட விற்பனை

புதுவருடத்தை முன்னிட்டு விசேடமாகத் தருவிக்கப்பட்ட துணி வகைகள், ஆண், பெண் இருபாலாருக்குமான றெடிமேற் உடுப்பு வகைகள் தற்போது விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. வாடிக்கையாளர்களே உங்கள் தெரிவுக்கு முந்துங்கள்.

410, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக)
யாழ்ப்பாணம்.

T.P No. 2381

(சி/6939)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழக எழுதுவினைஞர் தொழிநுட்ப அலுவலர் ஒன்றியம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு
உதவிப் பதிவாளர்களாக பதவியுயர்வு பெற்ற

திரு க. ஞானபாஸ்கரன் B. A.
திரு. த. அன்பானந்தன் B A.
திருமதி சி. குமாரசாமி B Sc.
திரு. இ. கிருஸ்ணகுமார் B. A.
திரு. வ. ஸ்ரீதரன் B. A.

ஆகியோரையும்

பதவி நிலை தொழிநுட்ப உத்தியோகத்தர்களாக
பதவியுயர்வு பெற்ற

திரு. ச. நரேந்திரன்
திரு. சீ. அருணகிரிநாதன்
திருமதி கி. ஸ்ரீதரன்
திரு க. சிவானந்தம்

ஆகியோரையும் மனமார வாழ்த்துகின்றோம்.

— அங்கத்தவர்கள்

29-03-1999 (சி/6960)



## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### சின்னத்தம்பி இராஜரத்தினம்

அன்னைமடியில் 1940 – 5 – 4
இறைவனடியில் 1998 – 4 – 12

பாசத்தைப் பொழிந்து அன்பாக வளர்த்திட்டு கண்ணாக நேசித்த மனைவி, மக்களிடம் ஒருவார்த்தை கூறாது எம்மை தவிக்க விட்டு எங்கு சென்றீர்கள்? அப்பா வாழ்வான வாழ்வை விரும்பும் நீங்கள் எங்களை மண்ணுலகத்தில் விட்டு நீங்கள் ஏனப்பா விண்ணுலகை விரும்பிச்சென்றீர்கள்? உங்கள் பெயரை உச்சரிககஇங்கு பிள்ளைகள் இருக்கிறோம். உங்களை அப்பா என ஆசையுடன் கூற முடியாதவாறு எங்களை அநாதைகளாக ஆக்கி விடடு எங்கு சென்றீர்கள் அப்பா.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி.
பிள்ளைகள். மருமக்கள்.
பேரப்பிள்ளைகள்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(64309)


## மூன்று வயதுச் சிறுமி மரணம்

வலி.கிழக்கு, ஏப்ரல் 1

செப்ரிசீமியா காய்ச்சலின் தாக்கத்துக்குள்ளாகி மூன்று வயதுச் சிறுமி ஒருவர் கடந்த 20 ஆம் திகதி யாழ். மருத்துவமனையில் மரணமடைந்தார்.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பவானந்தன் தர்சினி என்ற சிறுமியே மரணமடைந்தவராவார்.

[க-180]

## தாளையடிக்கு பஸ் சேவை

தென்மராட்சி, ஏப்ரல் 1

யாழ். பஸ் நிலையத்திலிருந்து தாளையடி, சாவகச்சேரி ஆகிய இடங்களுக்கு புதிய பஸ் சேவைகள் ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன

தினமும் காலை 9 35க்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் பஸ் தாளையடிக்குச் சென்று அங்கிருந்து பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும்.

இதேவேளை —

பகல்வேளையில் சாவகச்சேரி வரையிலான குறுகிய சேவையும் நடத்தப்படவுள்ளது. தினமும் மாலை 6.15 மணிக்கு யாழ். பஸ் நிலையத்திலிருந்து புறப்படும் பஸ் சாவகச்சேரியில் இரவு தரித்துவிட்டு காலை 6.15க்கு யாழ்ப்பாணம் செல்லும்.

(ஐ-117)

## செய்முறைப் பரீட்சை

வலிகாமம், ஏப்ரல் 1

கடந்த வருடம் டிசெம்டர் மாதம் நடைபெற்ற க.பொ.த. [சாதாரண] தரப் பரீட்சையின் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கு தோற்றிய யாழ்ப்பாண மாவட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான செயன்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் ஐந்தாம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற உள்ளதாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீத பூஷணம் எஸ். கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

வலிகாமம் வலயத்தில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் சங்கீதம், நடனம் ஆகிய பாடங்களுக்கும் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் சங்கீதபாடத்துக்கும் செயன்முறைப் பரீட்சைகள் நடைபெறும்.

அதேதினத்தில் வடமராட்சி பகுதியில் வடஇந்து மகளிர் கல்லூரியிலும் சங்கீத நடன பாடங்களுக்கான செயல்முறை பரீட்சைகள் நடைபெறும்.

தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள தபால் மூலம் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

[இ-3-152]

## நூலக வாரம்

சுழிபுரம், ஏப்ரல். 1

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்தின் நூலக வாரம் கடந்த வெள்ளிக்கிழமை ச.கைலாசநாதன் தலைமையில் நடைபெற்றது.

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் ச. சிவனேஸ்வரன், வலி.மேற்கு பிரதேச சபை நூலகர் திருமதி செல்வராணி, ஆகியோர் இந்த நிகழ்வில் சிறப்புரை ஆற்றினர்.

ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி அ. பேரம்பலம் ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்புச் செய்தார். அத்துடன் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களும் நூல்களை அன்பளிப்புச் செய்தனர். (க-28)

## ஜெனரேட்டர் பழுதானதால்
# புலோலிப் பகுதிக்கான மின்சாரம் துண்டிப்பு

வடமராட்சி, ஏப்ரல். 1

மந்திகை, புலோலிப் பகுதிகளுக்கு கடந்த இருவாரங்களுக்கு மேலாக மின்சார விநியோகம் தடைப்பட்டுள்ளது.

இப்பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கும் மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் உள்ள இலங்கை பிரசபைக்குச் சொந்தமான ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளதையடுத்தே இம்மின் தடை ஏற்பட்டுள்ளது.

பழுதடைந்துள்ள ஜெனரேட்டர் இன்னமும் திருத்தப்படாமையினால் இப்பகுதி மக்கள் மின்சாரம் இன்றிச் சிரமப்பட்டு வருகின்றனர்.

(ஐ-173)

# அதிகாலை வேளையில் வீதியில் நடந்த பிரவசம்

நெல்லியடி, ஏப்ரல் 1

பிரசவத்துக்காக வைத்தியசாலைக்குச் சென்று கொண்டிருந்த கர்ப்பிணித் தாய் ஒருவர் அதிகாலை வேளை வீதி ஓரத்தில் பெண்சிசுவைப் பெற்றெடுத்தார்.

இச்சம்பவம் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 2 30 மணியளவில் மந்திகைச் சந்திக்கு அருகில் பிரதான வீதியில் இடம்பெற்றது

அல்வாய் வடக்கிலுள்ள தமது வீட்டிலிருந்து மந்திகையை நோக்கி மோட்டார் சைக்கிளில், கணவருடன் வந்த கர்ப்பிணியான, தெய்வேந்திரன் - தெய்வநாயகி (வயது 18) என்பவரே இவ்விதம் சிசுவைப் பிரசவித்துள்ளார்.

இது குறித்து உடனடியாக மந்திகை மருத்துவமனைக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு கடமையிலிருந்த டாக்டர் கே. கனகரத்தினம் மற்றும் தாதிகள், மருத்துவமாது ஆகியோர் அங்கு சென்று தாயையும் பெண் சிசுவையும், 'ஸ்ரெச்சர்' மூலம் மந்திகை மருத்துவமனை விடுதிக்கு எடுத்துச் சென்றனர். நிறை குறைந்த சிசுவைப் பிரசவித்ததால் தற்பொழுது தாயும், சேயும் யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

(ஐ — 109 — 173)

## நினைவு நாள்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

மாதாஜி சச்சிதானந்த சிவானந்த சரஸ்வதியின் நினைவுநாள் இன்று வியாழக்கிழமை ஆகும். இதனை ஒட்டி இன்று காலை 9 மணிக்கு யாழ். திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் திருவடி பூசை இடம்பெறும்.

சிவானந்த சிறுவர் பாடசாலையினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.


தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையில்
## ஈருருளி வண்டிகளுக்கு பாதுகாப்புச் சேவை

தற்போது துர்க்காபுரம் தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலையில் இயங்கிவரும் மேற்படி வைத்தியசாலைக்கு வருகை தரும் நோயாளர், பார்வையாளர் ஆகியோரின் துவிச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றுக்கு 01 05 99 இல் இருந்து 30 - 04 - 2000 வரை பாதுகாப்புச் சேவையை வழங்க (தனிநபர். பொது தாபனங்கள்) விருப்பமுள்ளவர்களிடமிருந்து கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பத்திற்கும் மேற்படி வைத்தியசாலை அபிவிருத்திச் சபை செயலாளருடன் தொடர்பு கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி 20-04-99
நண்பகல் 12 மணி

சி. சிவமகாராசா
தலைவர்

க. தருமு
செயலாளர்

மாவட்ட வைத்தியசாலை தெல்லிப்பழை.

[64328]



முறைசாராக் கல்வி
## கணனிப் பயிற்சி நெறி-1999
## யா/திருக்குடும்பக் கன்னியர் மடம்

மேற்படி பயிற்சிக்கான விண்ணப்ப படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் 05- 04- 99க்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

விண்ணப்பதாரிகள் 01- 05 99 அன்று 17 வயதைப் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

— அதிபர் —

(64348)



## கண்ணீர் அஞ்சலி

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவின்
இசைத்துறைத் தலைவர்
திரு. S. பத்மலிங்கம்
அவர்களின் தந்தையார்
### K. சின்னத்தம்பி

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

கல்விசாரா ஊழியர்கள்
இராமநாதன் நுண்கலைக் கழகம்.

(64365)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நல்லூர் நூலகம்

# உதயன்

## நிறைவேறா வாக்குறுதியே

அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தேர்தல் காலங்களில் நடைபெறும் பிரசாரக் கூட்டங்களில் பேசுவதில் 99 சத வீத மானவை பொய். அவர்கள் அவ்வேளை வாக்காளருக்கு வழங்கும் வாக்குறுதிகளில், ஆட்சிக்கு வந்த பின்னர் ஒரு சத வீதமேனும் நிறைவேற்றப்படுவது அரிதிலும் அரிது!

இன்றைய ஜனநாயகப் பின்னணியில், நீரோட்டத்தில் இவை வழமையான நடைமுறைகளாகி விட்டன. அரசியல் அந்தளவுக்கு கண்ணியமற்றதாகவும் ஏமாற்றுத்தனம் மலிந்ததாகவும் மாறி விட்டது!

அந்த வகையில் —

தெரணியகலையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த பின்வரும் ''வாக்குறுதியை'' சேர்க்கலாமா அல்லது தவிர்க்கலாமா என்ற கேள்வி எழக்கூடும்.

வடக்கு — கிழக்கில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரை முடிவுக்குக் கொண்டு வந்து நாட்டில் இனங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்திய பின்னரே, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் பொதுத் தேர்தலுக்குத் தயாராகும் —என்பது தான் அந்த 'வாக்குறுதி'.

இன்னும் ஐந்து நாள்களில் நடைபெறவுள்ள ஐந்து மாகாண சபைகளுக்கான தேர்தலில் ஆளுங் கட்சியான பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கு வெற்றி கிடைக்குமாயின், தொடர்ந்து பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அரசியல் ஊகங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அவற்றில் உண்மை உண்டென நிரூபிக்கும் வகையில் தேர்தலுக்கு முன்னர் இரண்டு இராணுவ நடவடிக்கைகள் வன்னிப் பிரதேசத்தில் ''வெற்றிகரமாக'' நிறைவேற்றப்பட்டிடிருக்கின்றன.

நாட்டில் இனங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்திய பின்னரே பொதுத் தேர்தல் —

என்று கூறும் அதே வேளை —

போரை முடிவுக்குக் கொண்டு வந்த பின்னரே பொதுத் தேர்தல் — என்றும் கூறியுள்ளார் ஜனாதிபதி.

இனங்களுக்கிடையில் சமாதானத்தைக் கொண்டு வரக்கூடிய அரசியல் பலமும் துணிச்சலும் அரசாங்கத்துக்கு இல்லை என்பது கடந்த நாலரை வருட ஆட்சியில் சந்தேகத்துக்கு இடமின்றி ஆதார பூர்வமாக்கப்பட்டுள்ளது!

ஆனால் அந்தப் பலவீனத்துக்கும், துணிச்சலின்மைக்கும் எதிர்கட்சியான ஐ. தே. கட்சியே காரணம் என்றும் சதா பல்லவி பாடுகிறது அரசாங்கம்.

அவ்வாறாயின் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தாமல் தேவையான பலத்தையும் துணிச்சலையும் அரசு எங்கிருந்து எவ்வாறு பெறப்போகிறது?

போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற விருப்பம் இருக்குமாயின் அதற்கான சந்தர்ப்பங்கள் வந்துள்ள போதிலும் அசட்டை காட்டுவது ஏன்?.

ஆகையால் இந்த ''வாக்குறுதி''யும் நிறைவேற்றப்படாத வகையிலேயே நிச்சயம் சேரும்.

# மடுத் திருத்தலத்தில் படையினர் தங்கியிருப்பது விரும்பத்தக்கதல்ல

## யாழ். ஆயர் செய்தி

யாழ்ப்பாணம் ஏப். 1

கிறிஸ்தவ மதத்தினருக்கும், ஏனைய மதத்தினரிடையேயும் புகழும், பிரசித்தியும் பெற்ற மடு திருத்தலத்தில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பது விரும்பத்தக்கதல்ல.

உயிர்ப்பு விழாவை ஒட்டி யாழ் ஆயர் அதி. வந் தோமஸ் சௌந்தர நாயகம் அடிகள் விடுத்த செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது செய்தி வருமாறு:-

கிறிஸ்தவர்களாகிய எமக்கு உயிர்ப்பு விழா மிக முக்கியமான விழாவாகும். ஆண்டவர் யேசுவின் பாடுகள், மரணம். உயிர்ப்பு ஆகிய மறை உண்மைகளை அனுபவ ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் கொண்டாடி மகிழும் ஒரு மகிழ்ச்சியின் திருவிழாவாகும்.

இத் தருணத்திலும், கருமேகங்கள் போன்று கொடிய போரையும் அதன் விளைவுகளையும் அனுபவிப்பதும், கேள்விப்படுவதும் வேதனை தருகிறது.

அண்மையில் கிறிஸ்தவ மக்களின் மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய புனித மடுத் திருப்பணியை இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ளதாக அறிகின்றோம்.

கிறிஸ்தவ மதத்தினர்க்கும் மற்றைய மதத்தினர்க்கும் மத்தியில் புகழும் பிரசித்தியும் பெற்ற இந்த யாத்திரைத் தலத்தில் இராணுவத்தினர் நிலை கொண்டிருப்பது பெரிதும் விரும்பத்தக்கதல்ல. இது கிறிஸ்தவ மனங்களைப் பெரிதும் புண்படுத்தும் செயலாகும். இராணுவத்தினரும் ஏனைய போராளிகளும் இந்த இடத்தின் புனிதத்தன்மையை மதித்து இந்த இடத்தை விட்டு அகன்று அமைதிவலயமாக இந்த இடத்தை பிரகடனப்படுத்தும்படி மன்னார் ஆயர் ஜனாதிபதிக்கு கொடுத்த வேண்டுகோளை நாமும் இங்கு இணைந்து வலியுறுத்த விரும்புகின்றோம்.

இடம் பெயர்ந்து துன்புறும் அனைத்து மக்களுடனும் நாமும் ஒன்றிணைந்து, இறைவனின் அருளையும் பாதுகாப்பையும் வேண்டுகின்றோம்.

துன்பங்களும் வேதனைகளும் தொடர்ந்து வந்தாலும், அவை அனைத்தையும் தாண்டி ஆண்டவர் யேசுவோடு ஒரு புது வாழ்விற்கு உயிர்ப்போம். உயிர்ப்பு விழாவில் பங்குகொள்ளும் அனைவருக்கும் எம் அன்பார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்— என்று ஆயர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

வேலணை, ஏப். 1

நிதியமைச்சு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் யாழ். மாவட்டத்தில் நடத்தப்பட்ட கணக்கு எழுதுநர், கணக்குப் பதிவாளர் ஆகியோருக்கான நிதி முகாமைத்துவப் பயிற்சி நெறியில் பங்கு பற்றுயவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர்.

(ஐ-167)

## பருத்தித்துறையில் 'கிரிந்த' கப்பல்

வடமராட்சி, ஏப். 1

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கும் 'கிரிந்த' கப்பலில் தனியார் வர்த்தகர்களினால் உருளைக்கிழங்கு எடுத்து வரப்பட்டுள்ளது.

அத்துடன் கட்டடப் பொருள்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

(ஐ-173)

## சீட்டிழுப்பு வைபவம்

யாழ்ப்பாணம், ஏப். 1

வரணி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்க ஆதரவிலான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு வைபவம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பழைய மாணவர் சங்கத்தலைவர் எஸ் எஸ். உதயகுமார் தலைமையில நடைபெறவுள்ளது

இந்த நிகழ்வில பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா கலந்து கொள்ளவுள்ளார். [க]

## முதற் கட்ட கொடுப்பனவு

சங்கானை, ஏப். 1

வீடு சேதமுற்றவர்களுக்கான கொடுப்பனவின் முதற் கட்டக் கொடுப்பனவான 5. ஆயிரம் ரூபா வலி. மேற்கின் 22 கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 142 குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுக் கிராமிய வங்கி மூலம் இன்று வியாழக்கிழமை இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

(க - 29)

## மேய்ப்புப் பணிச் சபைகள் அமைப்பு

வடமராட்சி, ஏப். 1

யாழ். மறை மாவட்டத்தில் பங்குப் பிரிவுகள் தோறும் மேய்ப்புப் பணிச் சபைகள் அமைக்கும் பணி ஆரம்பமாகியுள்ளன.

கிறிஸ்து பிறந்து இரண்டாயிரம் ஆண்டினை வரவேற்கும் முகமாக இப்பணிச்சபைகள் ஆரம்பிக்கப்படுவதாக யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க திருச்சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

கரவெட்டிப் பங்கில் மேய்ப்புப்பணிச் சபை ஒன்று அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

(ஐ-173)

## சிறுவர் பாதுகாப்பு குழுக்கள் அமைப்பு

வலிகாமம்தெற்கு, ஏப். 1

கிராம மக்கள் மத்தியில வாழும் ஒரு வயது தொடக்கம் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களின் உரிமைகள் சம்பந்தமான பிரச்சினைகளைக் கண்டறிந்து அவற்றை தீர்த்து வைக்கும் பொருட்டு வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவில் கிராம மட்டத்திலான சிறுவர் பாதுகாப்புக்கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாதுகாப்பு நிதியுத்தின அனுசரணையுடன் இதுபோன்ற சிறுவர் பாதுகாப்பு கண்காணிப்புக் குழுக்கள் பிரதேசரீதியாக அமைக்கப்பட்டு வருகின்றன.

இதில் பாடசாலை அதிபர், ஆசிரியர், சமயகுரு, சமாதான நீதிவான், சட்டத்தரணி, முன்பள்ளி ஆசிரியர், அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதி, மாணவர் உட்பட ஒன்பது பேர் உள்ளடக்கப்பட்டிருப்பர்.

மேற்படி கண்காணிப்புக் குழுக்கள் தத்தம பிரதேசத்தில் உள்ள குழந்தைகளில் பாடசாலைக்குச் செல்லாது நிற்பவர்கள், வீட்டு வேலைகளில்அமர்த்தப்பட்டகுழந்தைகள் போன்றோரை கண்டறித்து அவர்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பர்.

கிராம மட்ட கண்காணிப்புக்குழுவினால் தீர்த்து வைக்க முடியாமற் போகும் பிரச்சினைகள் பிரதேச மட்டத்துக்கு கொண்டு செல்லப்பட்டு தீர்த்து வைக்கப்படும்.

உடுவில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் தலைமையில், உதவி திட்டமிடல் பணிப்பாளர், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர், சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், இளைஞர் சேவை உத்தியோகத்தர், கிராம சேவையாளர்கள்பலர் கலந்து கொண்ட கூட்டத்தில் மேற்படி குழுக்கள் அமைக்கப்பட்டன.

(ஐ-152)

### நாளை

பங்குனி 19

வெள்ளிக்கிழமை

திதி: துதியை

முழுநாள்

நட்சத்திரம்: சித்திரை

மாலை 6.47 வரை.

பெரிய வெள்ளி

கரிநாள்

சுபநேரம்: 6.11-7.41

ராகுகாலம்: 10.41-12.11

பகலுக்கும் இரவுக்கும்

(பழைய நேரப்படி)

### உதய வாக்கு

முடிந்தவரை ஆற்றல்களைத் திறமையோடு பயன்படுத்தினால் மகிழ்ச்சியையும், இலட்சியத்தையும் அடையலாம்.

- நெப்போலியன்

## சனியன்று பாடசாலை நாள்

வலிகாமம் தெற்கு, ஏப். 1

எதிர் வரும் ஏப்ரல் 3ஆம் திகதி சனிக்கிழமை பாடசாலை நாளாகும்.

கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கமைய ஒவ்வொரு தவணையிலும் ஒரு மேலதிக பாடசாலை நாள் ஒரு சனிக்கிழமையில் நடைபெற வேண்டும்.

இதற்கமைய எதிர் வரும் சனிக்கிழமை இந்த தவணைக்கான மேலதிக பாடசாலை நாளாக இருக்கும்.

அதே வேளை—

யாழ் மாவட்ட அனைத்து பாடசாலைகளும் முதலாம் தவணை விடுமுறைக்காக ஏப்ரல் மாதம் 9 ஆம் திகதி மூடப்பட உள்ளன.

அவை மீண்டும் ஏப்ரல் 26 ஆம் திகதி இரண்டாம் தவணைக்காக திறக்கப்படும்.

(ஐ - 152)

## கும்பாபிஷேகம்

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம் இன்று காலை 9.00 மணியளவில் இடம்பெற்று தொடர்ந்து 45 நாள்கள் மண்டலாபிஷேகம் நிகழும்.

கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து நடைபெறும் வைபவத்தில் ஆசியுரையை பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக் குருக்களும், தேவஸ்தானக்குருக்கள் சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்களும், அருளுரையினை நல்லைக் குருமணி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகளும், வாழ்த்துரையினை கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும்—

பாராட்டுரைகளை யாழ்ப்பாண அரச அதிபர் க. சண்முகநாதன், மேலதிக அரச அதிபர் து வைத்திலிங்கம், யாழ். மாவட்ட மேலதிக நீதிவான் எஸ். ஆர். ஈ. ஏகநாதன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

சிறப்புரைகளை ஆறு. திருமுருகன், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் ஆகியோர் வழங்குவர்,

(ஐ-73)

## தபால் பெட்டி நிறுவ ஏற்பாடு

வடமராட்சி, ஏப்ரல் 1

புலோலி வடகிழக்கு உத்திராவத்தையில் - புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அருகில் புதிதாக தபால் பெட்டி ஒன்றுநிறுவப்படவுள்ளது.

இப்பகுதி மக்களின் வசதிகருதி தபால் பெட்டி ஒன்றை நிறுவுமாறு பருத்தித்துறை பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசம் பருத்தித்துறை அஞ்சல் அதிபரைக் கேட்டிருந்தது.

இதனையடுத்து இப்பகுதியில் தபால் பெட்டி ஒன்று நிறுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-173)

## மெய்வல்லுநர் போட்டி

வலி வடக்கு, ஏப். 1

கோண்டாவில கிழக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் வை. சின்னத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் கல்வி வலய உதவிக் கல்விப பணிப்பாளர் திருமதி. ச. காங்கேயனும் சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய பிரதி அதிபர் திருமதி. அ. நாகேஸ்வரியும் கௌரவ விருந்தினராக ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆலோசகர் எம் சிவபாதமும் கலந்து கொள்ளவுள்ளனர்.

[ஐ]

## தேர் தரிப்பிடம் அமைப்பு

நல்லூர், ஏப். 1

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திர சேகரப பிள்ளையார் கோயிலில் புதிதாக நிறுவப்பட்டு வந்த தேர் தரிப்பிட நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

இத்தேர்த் தரிப்பிடத்தை சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கும் வைபவம் விரைவில் நடைபெறவுள்ளது.

(ஐ - 103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காரைநகர், மணற்

# ஸ்ரீ கும்பநாயகி முத்து





## புனராவர்த்தன நவ

## மஹா கும்பாபிஷே

## பிரதிஷ்டா பிரதம குரு அருளாசி

சைவமும் தமிழும் இந்து தர்மமும செழித்து விளங்கும் காரைநகரின் மத்தியிலே நவசக்தி பீடங்களில் ஒன்று எனச் சிறப்பிக்கப்படும் மணற்காடு ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாளுக்கு இன்றைய தினம் வெகு சிறப்பாக பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் அம்பிகை திருவருள் துணைகொண்டு நிகழுகின்றது.

சுமார் நானூறு ஆண்டுகள் பழைமையும் புதுமையும் பெற்று ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாள் என்னும் திவ்ய நாமத்துடன் ஜகந்மாதாவாக இவ்விடத்தில் அம்பாள் அருளாட்சி செய்து வருகின்றாள்.

இவ்வாலயத்தில் 1985 ஆம் ஆண்டு பங்குனி மாதம் ரோகிணி நட்சத்திரத்தில் (27 - 3 - 85) பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. இக்கும்பாபிஷேகத்தின் கிரியைகளில் அப்போது பங்குபற்றும் திருவருள் கிடைத்தது. இதனை நயினை பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் பிரதம குருவாக இருந்து நடத்தி வைத்தார்.

பின்னர் ஆறு மாதங்களில் பரிவார மூர்த்திகளுக்கு பிரதிஷ்டை செய்யும்போது சுப்பிரமனியருக்கு பரிவார மூர்த்தியராக இருந்து அடியேன் பங்குபற்றினேன். இத்தொடர்புகளினாலும் அம்பிகையின் திருவருளினாலும் இன்று பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகத்தை பிரதம குருவாக இருந்து செய்யும் பெரும் பாக்கியத்தை முத்துமாரி அம்மன் ஆஞ்ஞையினால் பெற்றிருக்கின்றேன்.

அனைத்து மக்களுக்கும் அம்பிகையின் அருளும் கும்பாபிஷேகப் பலன்களும் சகல சௌபாக்கியங்களும் நீண்ட வாழ்வும் கிடைக்க வேண்டும் என எல்லாம் வல்ல மணற்காடு உறை முத்துமாரி அம்பிகையை வேண்டி ஆசிகள் பல கூறி அமைகிறேன்.

சுபமஸ்து

கிரியாகலாப முத்தாமணி
**சிவஸ்ரீ ச. மஹேஸ்வரக்குருக்கள்**
கும்பாபிஷேக பிரதம குரு.

## திருப்பணிச் சபைத் தலைவர்வாழ்த்து

அனந்தமான கோயில்களில் அருள்மிகு மணற்காடு முத்துமாரி அம்பாளும் ஒன்று. அதனை ஓயாமல் புதுப்பித்துக்கொண்டிருந்தால் சக்தியின் மகிமை அதிகரிக்கும்.

கும்பாபிஷேகம் காலத்திற்குக் காலம் நடைபெறுகின்றது. செய்கை எல்லாம் அவள் செயல்; நினைவெல்லாம் அவள் நினைவு; சக்தியே நாம் உய்வடைய நாமாகி நமக்குள்ளே ஒளிர்வது என உறுதி கொண்டு, எம்மை இத்திருப்பணியில் ஈடுபடுத்தினார்.

1985ஆம்ஆண்டில் இருந்த திருப்பணிச்சபையினரே தொடர்ந்தும் இத்திருப்பணி வேலைகளைச் செய்ய அம்பாள் விரும்பினாள். 1992 இல் என்னைப் பீடித்த புற்றுநோய் அம்பாளின் திருவருளினால் ஒருமுறை வைத்தியத்துடன் நீங்கி இன்று கும்பாபிஷேகத்தை காணும் பேறு கிடைத்தமையை இட்டும்—

இத்திருப்பணி சிறப்புற அருள்பாலித்த அம்பாளின் திருவருளை வியந்து பொருளுதவி புரிந்த அன்பர்கள் அனைவரையும் நினைவு கூர்ந்தும்— நன்றி உரைப்பதில் உவகையுறுகின்றேன்.

**அ. சங்கரப்பிள்ளை**
ஆலய திருப்பணிச்சபைத் தலைவர்.

## நல்லை ஆதீன முதல்வர் அருளாசி

அம்பிகை அடியார்களே!

சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதோடு ஆலயங்கள் அறப்பணிகளையும், சமயப் பணிகளையும் ஆற்றுவது காரைநகர் புண்ணிய பிரதேசமாகும்.

தாயினுடைய அன்பினை அளவிட முடியாது. தாயானவள் மணற்காட்டில் முத்துமாரியாக எழுந்தருளி இருந்து வேண்டுவார் வேண்டும் வரத்தை வழங்கிக் கொண்டு இருக்கின்றார்.

இவ்வாலயத்தில் நடைபெறும் மகாகும்பாபிஷேகம் அம்பிகையினுடைய அருளை நிறைவாக்கிக் கொள்ளவும் மக்கள் எல்லோரும் சந்தோஷமாக வாழ வழி வகுக்கின்றது. கும்பாபிஷேக நிகழ்வைத் தரிசித்து மக்கள் எல்லோரும் தர்மமுள்ளவர்களாயும் சைவ அனுட்டானம் உள்ளவர்களாயும் அமைதியாக வாழவும் —

இக்கும்பாபிஷேகத்தைச் செய்யும் ஆலய திருப்பணிச் சபையினருக்கும் காரைநகர் வாழ் சைவ மக்களுக்கும் அம்பிகையின் அருள் கிடைக்கவும்— பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'
**ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக**
**ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்**

## கல்விப் பணிப்பாளர் வாழ்த்து

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்பாளுக்கு இன்று மகா கும்பாபிஷேக விழா நடைபெறுவது இக்கிராமத்தின் அருள் நெறி மேலும் வளர வழி வகுக்கிறது. இவ்வாலயம் காரைநகரின் மத்தியில் அமைந்துள்ளதால் அனைத்துக் கிராம மக்களும் தமது குல தெய்வமாக அன்னையைப் போற்றி வழிபடுகின்றனர். ஆலயத்தின் சூழலில் வாழும் அந்தணப் பெருமக்கள் மட்டுமன்றி அருகில் உள்ள யாழ்ற்றன் கல்லூரியும் இவ்வாலயத்துக்கு மேலும் மெருகூட்டுகின்றது.

1991 இல் மக்கள் இடம் பெயர்ந்த காலத்தில் கூட இங்கு பரம்பரைபரம்பரையாக நித்திய பூசைகளை மேற்கொண்ட ஞானசம்பந்தக் குருக்களை அன்னை தன்னுடன் இருக்கச் செய்து அருள் பாலித்தமை சிறப்பம்சமாகும்.

**ப. விக்கினேஸ்வரன்**
கல்விப்பணிப்பாளர்
வலயக் கல்வித் திணைக்களம். வேலணை.

## உதவி அரச அதிபர் வாழ்த்து

சைவமும் தமிழும் கல்வியும், செல்வமும் தழைத்தோங்கும் காரைநகர் பிரதேசத்தில் கோயில் கொண்டிருக்கும் ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் பெருஞ்சாந்திப் பெருவிழா நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வளவு சிறப்புமிக்க இவ்வாலயத்தின் பெருஞ்சாந்திப் பெருவிழா சிறப்புற வாழ்த்துவதுடன் எவ்வித தடங்கலும் இன்றி இவ்வாலயத்தின் அனைத்துக் கிரியைகளும் சிறப்புற நடைபெற சகல மக்களும் ஒத்துழைப்பு வழங்கி அம்பாளின் அருள்பெற வேண்டிக் கொள்கின்றேன்.

**ஜே. எக்ஸ். செல்வநாயகம்**
ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர்

## மூதாட்டியாக வ

## பரிபாலனத்துக்குப்

ஈழமணித் திருநாட்டின் சிகரமென விளங்கும் யாழ்ப்பாணத்தின் மேற்குப் பகுதியில் 14 கி. மீ. தொலைவில் இருப்பது காரைநகர் என்னும் புண்ணிய பூமியாகும். சைவமும் தமிழும் தழைத்தோங்கிய இம்மண்ணில் வரலாற்றுச் சிறப்புமிக்க புராதன ஆலயமாக காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலயம் விளங்குகின்றது.

கி. பி. 1618 இல் போர்த்துக்கேயர் ஊர்காவற்றுறைக்கு வந்து அங்குள்ள சைவக் கோயில்களை இடித்துத் தரைமட்டமாக்கினர், அதன் பின்னர் காரைநகரில் உள்ள ஐயனார் கோயிலை இடிக்க வந்து கோபுரவாசல் கதவைத் திறக்க முயன்றார்கள். அவ்வேளை அவர்களின் வாயில் இரத்தம் கசிந்து இறந்து விட்டார்கள் என்பது கர்ண பரம்பரைக் கதை.

### போர்த்துக்கேயர் காலத்தில்

போர்த்துக்கேயர் காரைநகருக்கு வந்த காலப்பகுதியில் அங்கு பெரியம்மை நோய் காரணமாக பெரும் எண்ணிக்கையான மக்கள் இறந்தனர். மக்களுக்கு அம்மைநோய் அகலுவதற்காக முத்துத்தாண்டவர் என்பவர் மணற்காடுஎன்ற இடத்தில் முத்துமாரி அம்மன் ஆலயத்தை ஒரு மாதத்தில் கட்டி முடித்தார். அந்த ஆலயத்திற்கு சிவஸ்ரீ சூரியநாராயணக்குருக்கள் கும்பாபிஷேகம் செய்தார். அதனைத் தொடர்ந்து திருவிழா, வேள்வி என்பனசெய்துமுடிய அம்மை நோயும் குறைந்து விட்டது. போர்த்துக்கேயர் தங்கள் சமயத்தின் பிரகாரம் எத்தனையோ ஆராதனைகள் செய்தும் நோய் குறையவில்லை. அதனால் அம்பாளுக்கு நடைபெற்று வந்த பூசை வழிபாட்டு முறைகளை அவர்கள் தடுக்கவில்லை.

கி. பி. 1658 இல் ஒல்லாந்

தர் ஊர்காவ
பிடித்தனர். ஒ
திற்குள் அநேச
கோயில்களை
னர். அம்மை நே
தால் மணற்காடு
அம்பாள் கோய
காது விட்டனர்.

பிற்காலத்தில்
நிலையில் இருந்
யம் இலங்கையில்
களிலும் திருப்ப
சேகரிக்கப்பட்டு
டடங்கள் பு
பட்டு மூலமூர்த்
மூர்த்திகள்
பட்டு கும்பாபிஷே
யப்பட்டது.

இருபதாம் நூ
நடுப்பகுதியில்
மீண்டும் பு
பெற்று 1947

### ந
(உ

அச்சுவேலி பி
குமாரசுவாமிக்
கும்பாபிஷேகம்
டது.

இறுதியாக 198
பணிச் சபையின
தானம்,
டபம், ப
தூபிவேலைகள்,
டபம் போன்
பாக நிர்மாண
மார்ச் 27 முதல்
பிஷேகம் நயினை
சுவாமிநாத
குருக்களால் ந
டது.

இவ்வாலயம்
ஆலயம். பல்லா
மாகப் பஞ்சாய
படி பரிபாலிக்கப்
இவ்வாலயத்தில்
மாதத்தில் ம
நவராத்திரி பத்
களும் பெள
விசேட திருவி
மிகச் சிறப்ப
பெற்று வருவது
1991 ஆம் ஆ


**விஜிதா ரெக்ஸ்ரைல்**
109, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

**இளவரசி ரெக்ஸ்ரைல்**
இல. 57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**கணேசன் ஸ்ரோஸ்**
இல. 201, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

வெங்கடே
79, கஸ்தூரியார் வீதி

சிறி மாத
97, கஸ்தூரியார் வீதி

**சிவகணேசன் ஸ்ரோஸ்**
41, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

**லலிதா ரெக்ஸ்**
இல. 5, 6, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**இ. ச. பேரம்பலம்**
சகநிறுவனம்
50, 52, 54 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கஜன் ரெ
இல. 40, கஸ்தூரியார் வீ

மதுரா நகை
59, கஸ்தூரியார் வீதி

**சீமாட்டி புடைவைக்கடல்**
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**மலர் புடைவையகம்**
18 [67-A] பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

**லிங்கம் ரேட் சென்ரர்**
78, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கலைவாணி நகை
111B, கஸ்தூரியார் வீதி

அலன் செ
இல. 06, பசார் லேன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ற்காடு அருள்மிகு தேவி

# மாரி அம்பாள் கோயில்



குண்டட்பசஷ பிரதிஷ்டா

ஷேக சிறப்பிதழ்



## வந்த முத்துமாரி
## ப் பணம் தந்தார்!

ாவற்றுறையைப்
ஒருமாத காலத்
நேக சைவக்
ா இடித்தழித்த
நோயின் பயத்
காடு முத்துமாரி
காயில இடிக்
னர்;
தில் பழுதடைந்த
ருந்த இவ்வால
கயின் பல பாகங்
ருப்பணி நிதி
ட்டு ஆலயக் கட்
புனரமைக்கப்
மூர்த்தி உற்சவ
ஸ்தாபிக்கப்
பிஷேகம் செய்
நூற்றாண்டின்
ல் இவ்வாலயம்
புதுப்பொலிவு
47 ஆம் ஆண்டு

மாதத்தில் காரைநகர் மக்கள் இடம்பெயர்ந்த போதிலும் இவ்வாலயத்தில் தொடர்ச்சியாக பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்தன. இவ்வாலய பிரதம குரு சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள் 25 ஆண்டுகள் உதவி அர்ச்சகராகவும் 27 ஆண்டுகள் பிரதான சிவாச்சாரியாராகவும் பணிபுரிவது குறிப்பிடத்தக்கது.

### மூதாட்டியாக வந்து அற்புதம்

1991 இல் மக்கள் இடம்பெயர்ந்தபோது ஆலய பரிபாலனத்திற்குப் பணமின்றி வருந்திய திருப்பணிச் சபைத் தலைவர் அ. சங்கரப்பிள்ளை அவர்கள் அம்பாளின் அற்புதச் செயலைக் கண்டு வியந்

**நடராசா பாரதி**
**(உதயன் காரைநகர் செய்தியாளர்)**

பிரம்மஸ்ரீ ச.
க் ருக்களால்
கம் ய்யப்பட்
க 1985 இல் திருப்
யினரால் மூலஸ்
அர்த்தமண்
பண்டிகை,
கள், வசந்தமண்
ான்றவை சிறப்
மாணிக்கப்பபட்டு
தல் மகா கும்பா
பினை பிரம்மஸ்ரீ
பரமேஸ்வரக்
நடாத்தப்பட்
பம் ஒரு பொது
ல்லாண்டு கால
சாயத்து முறைப்
பிக்கப்பட்டு வந்த
ந்தில் பங்குனி
மகோற்சவமும்
பத்து நாள்
பௌர்ணமிகளில்
ருவிழாக்களும்
ப்பாக நடை
நவது வழக்கம்:
ஆண்டு ஏப்ரல்

தார்.

தலைவர் சங்கரப்பிள்ளை மணற்காடு அம்பாள் ஆலயத்திற்கு வரும் வழியிலே வெண்ணிற ஆடை அணிந்து பொல்லூன்றிய மூதாட்டி ஒருவரைக் கண்டார். அந்த மூதாட்டி வெற்றிலைப் பொதி போன்ற ஒன்றை அவரிடம் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்.

அந்தப் பொதியை அவர் மணற்காடு முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச்சபை அலுவலகத்துக்கு எடுத்துச் சென்று அங்கு வைத்துத் திறந்து பார்த்தபோது அதற்குள் 51 ஆயிரம் ரூபா (நோட்டுக்களாக) இருப்பதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார். வெளியே வந்து பார்த்தபோது மூதாட்டி அங்கு நின்றார். அந்த மூதாட்டியிடம் பெயரைக் கேட்டபோது அவர் பெயர் கூற மறுக்கவே ''ஓர் அன்பர்'' என்று திருப்பணிப் பற்றுச்சீட்டு எழுதிக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஆலயப் பிரதம குரு அருளாசி

'சரீரம் த்வம் சம்போ: சசி
மிஹிர வசேஷாருஹ புரம்'

சிறை உணர்விலே பிறந்து சிறை உணர்விலே வளர்ந்து வாழ்ந்தவர்கள் வாழ்பவர்கள் இந்து சமயத்தவர்கள். அவர்களில் சற்றும் குறைவற்ற இறை பற்றினை உடையவர்கள் காரைவாழ் சைவமக்கள்; இவர்களுக்காகவே குளக்கோட்டரசன் காலத்தில் எடுக்கப்பெற்ற அருள்மிகு தேவி ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாள் தேவஸ்தானம் பழமையும் சிறப்பும் மிக்கதோர் ஆலயமாகும். இவ்வாலயத்தில் உறையும் தேவி கருணையும் சக்தியும் அமையப் பெற்றவள். இவ்வாலய புணருத்தராண மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதற்கு திருவருள் பாலித்துள்ளது. மேலும் இவ்வாலயத்தில் எனது 52 வருட கால பூஜை சேவையில் 7 ஆவது தடவையாக நடைபெறும் இந்த நன்னீராட்டு விழாவானது இறைவியின் திருவருளாகவே கருதுகின்றேன்.

எனது மூதாதையர் வழித்தோன்றலாக இன்று வரை மாரியம்மனின் தேவஸ்தானத்தில் சேவை புரிவதும், இறைவியின் கருணையும் ஆசீர்வாதமுமே ஆகும்.

இன்று நடைபெறும் மகாகும்பாபிஷேக தினத்தில் அம்பிகை அடியார்கள் அருள்மிகு தேவி ஸ்ரீ கும்பநாயகி முத்துமாரி அம்பாளை வணங்கி தேவியின் கும்பாபிஷேக தரிசனத்தைக் கண்டுகளித்து பேரின்பம் அடையவும்,

இந்த மகாகும்பாபிஷேகத்தின் பொருட்டு முத்துமாரி அம்பாளுக்கு திருப்பணி செய்தவர்களும் சரியைத்தொண்டு மற்றும் பொருளுதவி செய்தவர்களும் அம்பிகையின் திருவருளினையும், கருணையினையும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும் எனவும் —

மணற்காடு ஸ்ரீ கும்பநாயகி தேவி முத்துமாரி அம்பாளினைப் பிரார்த்தித்து ஆசீர்வதிக்கின்றேன். மூவகையிலும் சாந்தி நிலவுவதாக!

சுபமஸ்து

**சிவஸ்ரீ நா. ஞானசம்பந்தக் குருக்கள்.**
ஆலயப் பிரதமகுரு

## இளைப்பாறிய அதிபரிடமிருந்து

அம்பிகையில் திருவருளினாலும் சிவாச்சாரியார்கள், திருப்பணிச் சபையினர், திருவிழா உபயகாரர், அம்பிகை அடியார்கள் ஆகியோரின் அயரா உழைப்பினாலும் இன்றைய தினம் கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது.

ஆலயத் திருப்பணிச் சபையினர் தளராத உள்ளத்தோடு எத்துணை இடர்களையும் அம்பிகையின் திருவருள் துணையோடு எதிர்கொண்டு வெற்றி பெற்று ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற தாரகமந்திரத்திற்கு இணங்க எழில் மிக்க கலைக் கோயிலாக அம்பிகை ஆலயத்தைக் கட்டிமுடித்தமை

அம்பிகையின் அருட் பொலிவினால் 1991 இல் மக்கள் இடம்பெயர்ந்த பின்னரும் இவ்வாலயத்தில் பூசை வழிபாடுகள் தவறாது நடைபெற்று வந்தன. பாராட்டுக்குரியது.

திருப்பணிச் சபையினர் இவ்வளவோடு நின்று விடாது எஞ்சியுள்ள கோபுரவேலை, தேர்த்திருப்பணி. திருக்குளம் அமைத்தல் முதலிய திருப்பணி வேலைகளைச் சிறப்பாக நிறைவேற்ற அவர்களுக்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவதோடு அம்பிகையின் திருவருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக.

**கே. கே. நடராஜா**
(இளைப்பாறிய கொத்தணி அதிபர்)

## சிவத்தமிழ்ச் செல்வி வாழ்த்து

காரைநகர் மண்ணை அணிசெய்யும் திருக்கோயில்களில் பிரசித்தி பெற்ற ஆலயமாக விளங்குவது மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலயமாகும். பல வருடகாலமாக இவ்வாலயத்திற்குச் சென்று உரையாற்றிய வாய்ப்பைப் பெற்றவள் நான். அன்னையின் அருள் நிழலில் அமைதியும் ஆனந்தமும் அடைபவர்கள் பலர்.

யுத்த அனர்த்தத்தினால் சில காலம் மக்கள் சென்று வழிபட முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்ட போதிலும், அம்பாளை உள்ளத்திலே வைத்துப் பூசித்து வந்த அன்பர்கள் பலர் இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழ்ந்து கொண்டே இருந்தார்கள். அத்தகைய அன்பர்களின் அயரா அன்பினால் இன்று இவ்வாலயம் புனர் அமைப்புச் செய்யப்பட்டு குடமுழுக்குக் காண்கின்றது.

மக்களை வாழ்வாங்கு வாழ வைக்கும் தெய்வீக நிலையங்களே ஆலயங்களாகும். காலத்துக்குக் காலம் திருப்பணிகள் செய்து ஆலயங்களைப் பேணவேண்டிய கடமை அனைவருக்கும் உண்டு. இந்த வகையில்—

அருள்மாரி பொழிந்து குளிரவைப்பவள் முத்துமாரித் தெய்வம் என்பதை நாம் அனைவரும் உணர்வோம். இன்று போர், பகைமை சமூகச் சீர்கேடுகள் ஆகியவற்றால் நல்லுள்ளம் படைத்தவர்கள் பலர் தடுமாறிக் கொண்டிருக்கின்றனர். நீதிக்காகவும் உண்மைக்காகவும் ஏங்கித் தவிக்கின்றனர். இவர்களுக்கு ஆறுதல் அளிக்கும் அருள் நிலையங்கள் ஆலயங்களே என்பதை நாம் மறக்க முடியாது.

மணற்காடு மாரியம்பாள் அல்லல்கள் அகற்றி ஆறுதல் அளிக்கும் கருணைத் தெய்வம். அருள் வளமும், பொருள் வளமும் ஒரு சேரப்பெற்ற அன்பர்கள் பலரை தன்னகத்தே கொண்ட திருக்கோயில் இதுவாகும். குடமுழுக்கு விழாவினால் புதுப் பொலிவு பெற்று விளங்கும் அன்னை மாரியம்பாளின் திருவருள் நிரம்பப் பெற்று அனைவரும் நல்வாழ்வு வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகிறேன்.

**கலாநிதி சிவத்தமிழ்ச் செல்வி**
**தங்கம்மா அப்பாக்குட்டி**

மலரமைப்பு:

**உதயன்**
காரைநகர் செய்தியாளர்


டேஸ்வரா
ர் வீதி, யாழ்ப்பாணம்.

மாதவன்
ர் வீதி, யாழ்ப்பாணம்.

ரேட்ஸ்
ார் வீதி, யாழ்ப்பாணம்.

நகைமாடம்
ர் வீதி, யாழ்ப்பாணம்.

நகைமாளிகை
ர் வீதி, யாழ்ப்பாணம்.

ன் மென்சி
லேன், யாழ்ப்பாணம்.

**புதிய குறிஞ்சி மெடிக்கல்ஸ்**
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

**புஸ்பா அன் கோ**
404 A, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**கலைமகள் வர்த்தக நிலையம்**
286, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**ஸ்ரீ கணேஷ் ரெக்ஸ்**
இல. 20, நவீன சந்தை உட்புறம்,
யாழ்ப்பாணம்.

**குகன் ஸ்ரோஸ்**
180, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**யோ. சிவரஞ்சன்**
45, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**அற்புதா ரேடிங் கொம்பனி**
198, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**மகாலக்சுமி ஸ்ரோஸ்**
212, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**க. கனகசுந்தரம்**
152, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 ஆவது பிறந்த நாள் வாழ்த்து

## செல்வன் ரஜனிகாந்தன்

தக்குச்சம்பாதி. துன்னாலை மேற்கைச் சேர்ந்த
ஐயாத்துரை யோகேஸ்வரி
தம்பதிகளின் ஏக புதல்வன் ரஜனிகாந்தன்
தனது 18 ஆவதுபிறந்த தினத்தை இன்று 01-04-99 கொண்டாடுகின்றார். இவர், கலிகை கந்தன் அருளால் நீடூழி வாழ அனைவரும் வாழ்த்துகின்றார்கள்

குடும்பத்தினர்.

துன்னாலை மேற்கு,
துன்னாலை.
(94377)



## G. A. Q. [வெளிவாரி]
(பேராதனை)

+ மேற்குறிப்பிட்ட பாட நெறிக்குரிய பல்கலைப் பதிவுக்கான விண்ணப்பப்படிவங்கள் வந்து சேர்ந்துள்ளன.
+ A/L -ல் 3 பாடங்களுடன் 180 புள்ளிகளுக்கு மேற்பட்டவர்கள் இப் பட்டப்படிப்பை மேற் கொள்ள தகுதியுடையவர்களாவர்,
+ விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளது.
+ பதிவுகள் செய்ய விரும்புவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
+ விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

விவரங்களுக்கு:
S அருள்நங்கை
**புதிய உயர் கல்லூரி**
ஆரிய குளம் சந்தி, யாழ்.
[64381]


### மூதாட்டியாக...

(ஆறாம் பக்கத் தொடர்)

கொண்டு வந்தபோது அக் கிழவியைக் காணவில்லை. மக்கள் ஊரை விட்டு இடம் பெயர்ந்ததனால் மிகக் குறைந்த எண்ணிக்கையான மக்களே வசித்து வந்ததால் அக்கிழவியின் தோற்றத்தை ஒத்த வேறு எவருமே அங்கு வசிக்கவில்லை என்று அறிந்து அம்பாளின் திருவருளை வியந்தார்.

இன்று வியாழக்கிழமை (1-4-99) காலை 8. 52—10-43வரை உள்ளசுபவேளையில் அம்பாளுக்குப் புனருத்தாரண பிரதிஷ்டா மகா புனராவர்த்தன கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ ச, மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் ஏனைய சிவாச்சாரியார்களும் சேர்ந்து பெருசாந்திப் பெருவிழாவை நடத்திவைப்பார்கள்.

## கூ. சமாசத்தில் பக்ஸ் வசதி

அரியாலை, ஏப், 1

யாழ். மாவட்ட விவசாய கூட்டுறவுச் சமாசத்திற்கு 'பக்ஸ்' வசதி அமைக்கப் பட்டுள்ளது.

சமாசத் தலைவர் சீ, வீ கே சிவஞானம் மேற்கொண்ட முயற்சியால் 'பக்ஸ்' வசதி சமாசத்திற்கு கிடைத்துள்ளது. (ஐ – 17)

# யாழ். நவீன சந்தையில் 41 கடைகள் மூடிய நிலை

யாழ். நவின சந்தைக் கட்டடத் தொகுதியில் கடந்த சில வருடங்களாக 41 கடைகள் திறக்கப்படாத நிலையிலிருப்பதாக யாழ். மாநகர சபை புள்ளிவிவர அறிக்கை மூலம் தெரிய வருகிறது.

இந்தக் கடைகளின் உரிமையாளர்கள் இடம் பெயர்ந்து சென்று இதுவரையும் மீளக் குடியமர முடியாமலுள்ளமையினால் இக் கடைகள் திறக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது,

இதேவேளை-

கடந்த கால வன் செயல்களால் 16 கடைகள் முற்றாகச் சேதமடைந்திருப்பதாலவும் தெரிவிக்கப்படுகிறது

மேற்குறிக்கப்பட்ட கடைகளின் வாடகை உரிமையாளர்கள் மூன்றுமாத காலத்துக்குள் யாழ்.மாநகர சபையுடன் தொடர்பு கொண்டு தமது ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ளுமாறு வேண்டப் படுகின்றனர். [ஐ-5]


யா/அரியாலை - பிரப்பங்குளம்

## மகாமாரி அம்பாள் தேவஸ்தானம்

## மகா கும்பாபிஷேக விழா 1999

பங்குனி மாதம் 18 ஆம் திகதி (01 - 04 - 99)
வியாழக்கிழமை விநாயகர் வழிபாடு கணபதிஹோமம் முதலிய கிரிகைகளுடன் ஆரம்பமாகி பங்குனி மாதம் 21 ஆம் திகதி (04-04-99) ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெறும்.
காலை 10 மணி முதல் — மாலை 4.00 வரை

**எண்ணெய்க் காப்புச் சாத்தல்**

பங்குனி மாதம் 22 ஆந் திகதி
(திங்கட்கிழமை 05 - 04 - 99)
காலை 7 மணி முதல் கிரியைகள் நடைபெற்று காலை 9 15மணி தொடக்கம் 10.30 மணிவரையுள்ள சுப வேளையில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.
மாலை 4. 00 மணி முதல்
விசேட பூசையைத் தொடர்ந்து
அம்பாள் பூந்தொட்டியில் வீதியுலா வருதலும் நடைபெறும்.

பரிபாலனசபை

(சி/6987)



உ
சிவமயம்

## புதுக்கடைத் திறப்புவிழா

அன்புடையீர்!

நிகழும் வெகுதானிய வருடம் பங்குனி 18 ஆம் திகதி (01—04—1999)
வியாழக்கிழமை காலை 11-00 மணி — 12-54 மணி வரையுள்ள
சுபவேளையில்
எம்மால் புதிதாக ஆரம்பிக்கவுள்ள

## ஹட்லான்ட்ஸ் ஹோட்டல்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் சமுகமளித்து திறப்பு விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்!
த. கனகரெத்தினம்
(சாந்தி கபே)

மக்கள் வங்கி முன்பாக,
73, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
(64378)



## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர்
க. கதிர்காமநாதர்
அவர்களின் தந்தையார்
அமரர்
**சின்னத்தம்பி கந்தையா**

அவர்களுக்கு எமது அஞ்சலியைச் செலுத்தி, ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன், அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்,
மானிப்பாய்.
[64387]



உ
ஸ்ரீ வரதராஜ விநாயகர் துணை

## விவாக சுபமுகூர்த்த அழைப்பு

அன்புடையீர்!

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் பங்குனி மாதம் 18 ஆம் நாள் (01—04—1999) வியாழக்கிழமை பிரதமைத் திதியும் அத்த நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய காலை 8-46 மணி முதல் 10-49 மணி வரையுள்ள இடபலக்னமும், குருவோரையும் கூடிய சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| அல்வாய் கிழக்கு, மாலிசந்தி<br>சிவஸ்ரீ சபாரத்தினக்குருக்கள்<br>பௌத்திரனும்<br>எமது கனிஷ்ட புத்திரனுமாகிய<br>சிரஞ்ஜீவி<br>**சுரேந்திர சர்மா** | சுன்னாகம், மயிலணி<br>சிவஸ்ரீ கார்த்திகேய ஐயர்<br>பௌத்திரியும்<br>எமது ஏக புத்திரியுமான<br>சௌபாக்கியவதி<br>**சாந்தினியை** |

கன்னிகாதான, பாணிக்கிரஹண, திருமாங்கல்யதாரணம் செய்து வைக்க எல்லாம் வல்ல விநாயகர் திருவருட் துணையுடன், பெரியோர்களினால் நிச்சயம் செய்யப்பெற்று திருமணம் மணமகள் இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராக வந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்: காலை 6-30 மணி முதல் முதலிகோயிலடி, 22, சேர்ச்லேன், கொக்குவில் இல்லத்தில் நடைபெறும்.

வதூவர கிருகப் பிரவேசம்: மாலை 4-00 மணி

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

| | |
|---|---|
| சிவஸ்ரீ சபா. தேவராஜக்குருக்கள்<br>குடும்பத்தினர்<br>பிள்ளையார் கோயில்<br>மாலிசந்தி, அல்வாய். | சிவஸ்ரீ கா. ஸ்ரீநிவாசன்<br>குடும்பத்தினர்<br>மயிலணி,<br>சுன்னாகம். |

இரு வீட்டார் அழைப்பு
(64318)



## கண்ணீர் அஞ்சலி



**சின்னராசா சிவாகரன்**
(களஞ்சியப் பொறுப்பாளர், வி. எஸ். பி. குறூப்)

எமது சக நிறுவனத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் சின்னராசா சிவாகரன் அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமரரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பங்காளரும், ஊழியர்களும்,
ஜெசிபா ஏஜென்சி'
132, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/6991)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயம்

○ உதவி ஆசிரியர்கள

○ மொழி பெயர்ப்பாளர்

பத்திரிகைத்துறையில் அல்லது வேறு ஏதாவது வெகுஜன ஊடகத்துறையில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவமும், ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் உதவி ஆசிரியராகவும் பணி புரிந்த தகுதியுள்ளோர் விண்ணப்பிக்கலாம். 40 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. இரவுப்பணி செய்யத்தக்க உடல் ஆரோக்கியம் அவசியம். ஆங்கில அறிவும் மொழிபெயர்ப்பு ஆற்றலும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

ஆங்கிலத்தில் மிகுந்த தேர்ச்சியும் தமிழில் பாண்டித்தியமும் உடையவர்களிடமிருந்து மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள கோரப்படுகின்றன. செய்திகள், கட்டுரைகளை பத்திரிகைக்கு ஏற்ற வகையில் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த மூன்று வருட அனுபவம் தேவை. தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்ககூடிய திறமை உடையவர்களுக்கு விசேட முன்னுரிமை தரப்படும். இரவுப் பணி செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும்.

பூரண சுயவிவரங்களுடன் 3 - 4 - 1999 ஆம் திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும்;

பிரதம ஆசிரியர்
உதயன் - சஞ்சீவி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு
கிராம அலுவலர்
மு. தர்மலிங்கம்
அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி முருகேசு செல்லாச்சி

அவர்கள் காலமானதை ஒட்டி அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் பிள்ளைகள், உறவினர்களுககு எமது ஆழ்நத அனுதாபத்தையும், அன்னாருககு எமது அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உதவிஅரசாங்கஅதிபரும்,
பணிமனை உத்தியோகத்தர்களும்,
பணியாளர்களும், கிராம உத்தியோகத்தர்களும்,
வெளிக்கள உத்தியோகத்தர்களும்,

உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
ஊர்காவற்றுறை. (64356)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### யோகம்மா சின்னத்தம்பி

பிறப்பு 22—04—1929
இறப்பு 12—04—1998

பாசமுடன் எம்மை வளர்த்தெடுத்து ஆளாக்கி வைத்த எம் அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்;

பிள்ளைகள். மருமக்கள்

சி. விவேகானந்தா,
70/6, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம். (64275)

## முழுக் குடும்பமுமே காங்கேசன்துறை முகாமில்!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

கொடடிப் பகுதியைச் சேர்ந்த ஒரு குடும்பம் விசாரணைக்காக படையினரால் கைது செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இந்தக் குடும்பம் காங்கேசன்துறை தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி செல்வி கௌரி சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

காங்கேசன்துறைத் தடுப்பு முகாமுக்கு நேற்றுச் சென்ற சமயம் இது விடயம் தமக்கு தெரிவிக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

சின்னத்தம்பி தியாகராசா, அவரது மனைவியான கமலாதேவி, அவர்களது பிள்ளைகளான ராதிகா (21 வயது), சதானந்தன் (25 வயது) ஆகியோரே தடுத்து வைக்கப்பட்டுள்ள — குடும்பத்தைச் சேர்ந்த நபர்களாவர்,

தியாகராஜாவின் பிறிதொரு மகனான குகதாஸ் ஏற்கனவே கைது செயப்பட்டு காங்கேசன்துறைத் தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

காங்கேசன்துறை முகாமில் 26 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் —

அண்மையில் கைது செய்யப்பட்ட எஸ். சுமித்திரன் (சாவகச்சேரி) சி. கனியூட் (குருநகர்), அ. அருள்றெக்சன் (பழைய பொலீஸ் நிலையத்தடி, யாழ்ப்பாணம்) ஆகியோரும் அங்கு உள்ளனர் என்றும்—

செல்வி கௌரி சுந்தரலிங்கம் மேலும் தெரிவித்தார். (உ-3)

## யாழ். நகரில் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

வீடடின் ஜன்னற் கம்பியை வளைத்து உள்ளே சென்றவர்கள் அலுமாரியில் இருந்த தாலிக்கொடி, சேலைகள், கைக்கடிகாரங்கள் போன்ற பெறுமதியான பொருள்களள எடுத்துச் சென்றனர்.

கடந்த ஞாயிறு இரவு யாழ்ப்பாணம் கோயில் வீதி ஒழுங்கையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவதினம் வீட்டுக்காரர்கள் அறையின் ஹோலில் நித்திரை செய்தனர் என்றும்—

காலையில் எழுந்து பார்த்த போதே பொருள்கள் களவு போனது தெரியவந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஜன்னல் ஊடாக உள்ளே நுழைந்து அறையின் அலுமாரியைத் திறந்த திருடர்கள் அங்கிருந்த இரு ''பாக்'' குகளை வெளியே எடுத்துச் சென்று அதற்குள் இருந்த பொருள்களையும் எடுத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது

இந்தத் திருட்டுத் தொடர்பாக யாழ். பொலிஸ்நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது. [இ]

## மோதல்

கனகராயன் குளம் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் நேற்று முன்தினம் காலை மோதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

இந்த மோதலில் நான்கு படையினர் காயமடைந்தனர் என்று படைத்தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-3-21]

## ச.ச. நிலைய கட்டடம் புனரமைப்பு

நெல்லியடி, ஏப்ரல் 1

புலோலி கிழக்கு உத்திராவத்தை மத்திய சனசமூக நிலையக் கட்டடமும் 10 ஆயிரம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது; (ஐ-109)

காரைநகர் — மணற்காடு

## ஸ்ரீகும்பநாயகி முத்துமாரி கும்பாபிஷேக பெருவிழா மங்கலம்



உன்னை தொழுது அழுது நிற்போம்
உரிமையோடு காக்க வேண்டும் தாயே
நின்னை பாடிப் பணிந்து நிற்போம்
நினைத்த யாவும் சேர்க்க வேண்டும் தாயே
அன்னை உன்னை நம்பி என்றும் வாழ்வோம்
அன்பு இங்கு பெருக வேண்டும் தாயே
மண்ணை எம்மை காக்க வேண்டும் அம்மா
மாரி உன்னை போற்றி செய்து வாழ்வோம்;

- மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்


இன்றைய (01-04-99) கும்பாபிஷேக விழா சிறப்புற வாழ்த்துவோர்:

### பாலகணேசன் ஸ்ரோர்ஸ்

இல. 225, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம். (64355)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

★ ◀♠▶ ★ ◀♠▶ ★ ◀♠▶ ★ ◀♠▶ ★



செல்வி
### விஜயமாலா உதயரஞ்சன்

இரட்டயப்புலம், சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாயைச் சேர்ந்த

உதயரஞ்சன் — தர்சினியின் செல்வப் புதல்வி
விஜயமாலா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (01-04-99) தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். சண்டிலிப்பாயிலுள்ள அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அப்பப்பா, அப்பம்மா. தாத்தா, அம்மம்மா, மாமாமார், அத்தைமார். மச்சான்மார், மச்சாள்மார், லண்டனில் இருக்கும் தாத்தா, அப்பம்மா, அததைமார், மாமா, ஜேர்மனியில் இருக்கும் தாத்தா, அப்பம்மா, மாமா, அத்தை ஆகியோர் செல்வப் புதல்வியை வைரவர் அருள் பெற்று வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

பெற்றோர்

சண்டிலிப்பாய். (64271)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒலிம்பியா, றெமிங்ரன் தமிழ் தட்டச்சு பொறிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்லையா ஜி.பி.எஸ். றோட், கல்வியன்காடு. [64335]

## தவறிவிட்டது

தம்பியையா மணியம் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல. 541943870V), விசேட அடையாள அட்டையும் கடந்த 29 - 3 - 99 அன்று வண்ணார் பண்ணை நாச்சிமார் கோயிலடிக்கும் கொக்குவில் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆ. பாலசிங்கம் இல 20, சிவகுருநாதர் வீதி, நீராவியடி எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். [64342]

செல்லத்துரை உத்தமலட்சுமி ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் [இல. 587342430V] [உத்தமலட்சுமி ரவிச்சந்திரன்] 19-03-99 அன்று சீரணி நாகம்மாள் ஆலயத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஆலங்குழாய் வாசிகசாலைக்கு அருகிலுள்ள கூட்டுறவுக்கடையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [64347]

## திருமண சேவை

1968 ஆம் ஆண்டு அனுஷ நட்சத்திரம் உடைய வைத்தியருக்கு அழகிய மணமகள் தேவை. புகைப்படம் சாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். மேலும் எங்களிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உண்டு. துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [64370]

## தேவை

3 அறைகளுடன் கூடிய வசதியான வீடு மாநகரசபை எல்லைக்குள் வாடகைக்கு அல்லது விலைக்குத் தேவை. தொடர்பு: லெனாட் 222, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி இல. 2062. [64372]

## மணமகன் தேவை

படித்த கௌரவமான குருகுலக் குடும்பத்தைச் சேர்ந்த 27 வயது சதய நட்சத்திரமுடைய கிரக பாவம் மிகக் குறைந்த பெண்ணுக்கு பட்டதாரி / உயர் அரச உத்தியோகத்தர் தரத்திலுள்ள மணமகன்தேவை. தொடர்பு: இல 861, மே / பா உதயன், யாழ்ப்பாணம். (64222)

## மணமகள் தேவை

கத்தோலிக்க 40 வயதுடைய ஓரளவு படித்த அழகான, குற்றம் இல்லாத மணமகனிற்கு மணமகள் தேவை. தொடர்பு: இல. 862, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [64340]

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 31 வயது நிரம்பிய ஹொட்டல் முகாமைத்துவம் சித்தியடைந்த கனடாவில் நிரந்தர தொழில் புரியும் மணமகனுக்கு பாவம் குறைந்த நற்குணம் உள்ள மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். பட்டதாரிகள் விரும்பத்தக்கது. கனடா கூட்டிச் செல்லும் விஸா உண்டு. உடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 863, மே/பா உதயன், யாழ்ப்பாணம். [64349]

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளும் உட்பட [சாப்பாட்டுடன்] பல்கலைக்கழகத்திற்கு அருகில் வீடு ஒன்று வாடகைக்கு விடப்படவுள்ளது. குறிப்பாக பல்கலைக்கழக மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விவரம் நேரில் பேசிக்கொள்ளலாம். தொடர்பு: க. விசாகரெத்தினம், 212, சேர் பொன். இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம். [64345]

# 2 லட்சம் தேங்காய்கள் 'மாஹோ' கப்பலில் வந்தன

அரியாலை, ஏப். 1

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி, நுகர்வோர் கூட்டுறவு சமாசத்திற்கு 'மாஹோ' கப்பலில் சுமார் 2 லட்சம் தேங்காய்கள் தருவிக்கப்பட்டிருப்பதாக சமாசத் தலைவர் சி. வீ. கே. சிவஞானம் தெரிவித்தார்.

பருத்தித்துறை துறைமுகத்தில் தேங்காய்கள் இறக்கும் பணி தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தருவிக்கப்பட்ட தேங்காய்களை கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மக்களுக்கு விநியோகிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேங்காய் ஒன்று 37 ரூபாவாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

இவ் விலை நிர்ணயத்திற்கு மேற்படாது சங்கங்கள் அவற்றை விநியோகிக்க வேண்டும் — என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ஐ-17)

# ஆலய சூழலில் சிரமதானம்

யாழ்ப்பாணம். ஏப். 1

நல்லூர் வடக்கு ஸ்ரீசந்திரசேகரப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் வடக்கு சனசமூக நிலையத்தினரும், விநாயகர் விளையாட்டுக் கழக உறுப்பினர்களும் இணைந்து ஆலய சூழலை சிரமதானம் மூலம் துப்புரவு செய்து வருகின்றனர். (ஐ)

# மலசல கூடம் அமைக்க நிதி

சங்கானை, ஏப். 1

சங்கானை அரசினர் வைத்தியசாலையின் வெளிநோயாளர்களின் பாவனைக்காக மலசல கூடங்களை அமைக்க 'போரூட்' நிறுவனம் நிதி உதவி வழங்கவுள்ளது.

இந்த மலசல கூடங்கள் அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் என வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். [க-29]

# 3 ஆயிரம் பரல் தார் வந்தது

யாழ்ப்பாணம், ஏப். 1

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி திருத்தப்பணிகளுக்கென 3 ஆயிரம் தார் பரல்கள் 'மாஹோ' கப்பல் மூலம் நேற்று முன்தினம் யாழ். எடுத்து வரப்பட்டுள்ளன.

தார் பரல்கள் வந்து சேர்ந்ததை அடுத்து தமது பொறுப்பில் உள்ள வீதிகளின் திருத்த வேலைகள் உடன் ஆரம்பிக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன; (ஐ-7)


## முறைசாராக் கல்விப் பிரிவு

யா/ நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்
கரவெட்டி

# விண்ணப்பங்கள் கோரல்

பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு பயிலுநர்களிடமிருந்து (இருபாலார்) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. வர்த்தகச் சித்திரம்
2. தொலைக்காட்சிப் பயிற்சி

★ தொலைக்காட்சிப் பயிற்சிக்கு போதனாசிரியா விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்று உடன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்.

யா /நெல்லியடி ம. ம. வித்தியாலயம்,
கரவெட்டி. (சி/6986)



CEFE - Competency Based Economies Through Formation of Enterprises

ஸ்ரீலங்கா - ஜேர்மன் CEFE நிகழ்ச்சித்திட்டம்,
GTZ யாழ்ப்பாணப் புனர்வாழ்வுச் செயற்றிட்டம் என்பன
யாழ். பல்கலைக்கழகத்துடன்
இணைந்து வழங்கும்

# தொழில் முயற்சியாண்மைப் பயிற்சி நெறி

## நான்காவது பயிற்சிப்பட்டறை

தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கவுள்ளோரும் தொழில் முயற்சிகளை வெற்றியுடன் நடத்தி விரிவாக்கம் செய்ய விரும்புவோரும் வெற்றியின் இரகசியங்களை அனுபவபூர்வமாக உணரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள தீவிரப் பயிற்சி நெறி.

**பயிற்சிக்காலம்:-** 14 நாள்கள்.
(14 நாள்களும் தொடர்ச்சியான பங்குபற்றல் அவசியம்)

**பயிற்சி முறை:-** செயல்வழிக்கற்றல் (Action Learning)
பயிற்சிக்காலத்தின்போது பயிலுநர்கள் ஒரு சுய தொழிலுக்கான பூரணத்துவமுடைய தொழிற்றிட்டம் ஒன்றைச் சிறந்த முறையில் தயார் செய்து கொள்ள முடியும்.

**இடம்:-** யாழ். பல்கலைக்கழக (CITY HALL) சிற்றி ஹோல்
பயிற்சி ஒன்றுக்கான பயிலுநர் தொகை 25 - 30-க்கு மட்டுப்படுத்தப்படும்.
பயிற்சிப் பதிவுக் கட்டணம் ரூபா 1000.
பயிற்சிக்குரிய ஏனைய செலவுகள் அனைத்தும் இலவசம்.
விண்ணப்பப் படிவங்களை ரூபா 10.00 செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்
விண்ணப்ப முடிவு திகதி 10 - 04 - 1999.
விண்ணப்பங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

**Coordinator / CEFE Unit
University City Hall,
Jumma Mosque Lane, Jaffna.** (64351)


# 30 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
## இராசவல்லவன் உருக்குமணிதேவி

அன்னை மடியில் 01 — 04 — 1946
இறைவன் அடியில் 04 — 03 — 1999

அன்னார் சுகவீனமுற்று இருக்கையில் அவரிற்கு சிகிச்சையளித்த குடும்ப டாக்டர், போதனா வைத்தியசாலை டாக்டர்கள், தாதிமார்கள் இறுதி நாள் இரவு நேரம் அருகில் இருந்து தனது கடமையைச் சிறந்த முறையில் செய்த உதவியாளர், கண்ணீர் அஞ்சலி செலுத்திய யா/ ஏழாலை சைவ மகாஜன வித்தியாலய ஆசிரியர், ஆசிரியர் அல்லாத ஊழியர், மாணவர், பெற்றார், பழைய மாணவர், நலன் விரும்பிகள், யா/ ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர், ஆசிரியர், ஆசிரியர் அல்லாத ஊழியர்கள், மாணவர்கள், நேரில் சமுகந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள் (வலிகாமம், தீவகம்), கல்வி அதிகாரிகள், ஊழியர்கள், ஏனைய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரியர் அல்லாத ஊழியர்கள், மாணவர்கள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள், தந்தி மூலம், கடித மூலம், தொலைபேசி மூலம் அனுதாபம் செலுத்திய அனைவருக்கும், இங்கு குறிப்பிடத் தவறியவர்கட்கும் எமது நன்றிகள்.

02 — 04 — 1999 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம், தனிப்பட்ட முறையில் அழைப்பு அனுப்பாததையிட்டு வருந்துகின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
கா சிறீரங்கநாதன் குடும்பம்,
சேதுவிபுலானந்தா, சூட்டிமாஸ்ரர்,
செல்வநாயகி, ஜெயகௌரி,
ஞானநந்தன், ஆனந்தகௌரி, கோகிலன் [U.K.].

17, செல்லாச்சியம்மையார் வீதி,
சுன்னாகம். (சி/6959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழாலை மத்தி

## நாகதம்பிரான் ஆலய வருடாந்த வீதி உலா

எமது ஆலய வருடாந்த குளிர்த்தி வைபவத்தை வைப்பதற்கு இன்று வியாழக்கிழமை நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து ஊர்வலமாகி காங்கேசன்துறை வீதிவழியாகச் சென்று யாழ். நகரில் இருந்து வெள்ளிக்கிழமை காலை திரும்பவும் பலாலி வீதி வழியாக இருப்பிடத்தை வந்தடைவார் என அடியார்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

பா. புஸ்பராணி [பூசகர்]

ஏழாலை மத்தி. (64396)

## நியந்திரி வருடாந்தப் பொதுக் கூட்டம்

மேற்படி கூட்டம் 1999-04-04 (ஞாயிறு) பிற்பகல் 2.00 மணிக்கு நல்லூர் சிவன் கோவில் மண்டபத்தில் நடைபெறும்.

த. சதாசிவ ஐயர்
செயலாளர்

31-03-99 (சி/6993)

## நெஞ்சம் மறவா 4ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 09 - 07 - 1925

விண்ணில் 01 - 04 - 1995

### அமரர் J. P. சிங்கராயர்

ஆண்டு நான்கு ஆனாலும்
ஆற்றுமோ நம் துயரம்?
நீண்ட நேரம் அழுதாலும்
நீங்கிடுமோ உங்கள் நினைவு?

உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்கள், குடும்பத்தினர்.

அச்சுவேலி.
(64395)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு : 14 — 01 — 1918



இறப்பு: 28 — 03 — 1994

### சின்னப்பு குணரத்தினம்

திதி 01-04-1999

ஆண்டு ஐந்து சென்றாலும் ஆறிடுமோ எம் இதயம்? ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி - கு. பொன்னம்மா
பிள்ளைகள்- நவரத்தினராஜா லோஜினி
(யாழ். போதனா வைத்தியசாலை)
ராஜேஸ்வரி சுந்தரலிங்கம், மகன் - சுஜன்
(செல்வம் பற்றி சார்ஜ் உரிமையாளர்)
ரஞ்சிதா சிவானந்தம் (UNDP Staff)
நடராஜா யசோதரா (ஆஸ்திரேலியா)
பேரப்பிள்ளைகள்: தர்ஜினி, சுஜன்
நிரோஜா (ஆஸ்திரேலியா)

தகவல்:
கு. பொன்னம்மா

மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை. (64394)

# சர்வதேச மன்னிப்புச் சபையின் முன் செம்மணி புதைகுழியை தோண்டுக!

## தமிழ்க் கட்சிகள் கோரிக்கை

கொழும்பு, ஏப்ரல் 1

சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் சர்வதேச நிறுவனங்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் செம்மணிப் புதைகுழிகள் தோண்டப்பட வேண்டும் என்று அரசுக்கு அழுத்தம் கொடுப்பது என ஐந்து தமிழ்க் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஐந்து தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் கொழும்பில் கூடிப் பலதரப்பட்ட விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்தபோதே மேற்கண்ட முடிவும் எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் என். ரவிராஜ், ஈ.பி.டி.பி சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ரெலோ சார்பில் அடைக்கலநாதன், புளொட் சார்பில் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரும் மற்றும் கட்சியின் ஏனைய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுத்த முக்கிய முடிவுகள் வருமாறு:

★ திருகோணமலை மாவட்டததில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை எதிர்ப்பதுடன் லிங்க நகர் உட்பட சில இடங்களிறு சமீபகாலமாக இடம் பெறல் வரும் சிங்களக் குடியேற்றங்களைக் கலைத்து விடுமாறு அரசைக் கோருவது.

★ வன்னிப் பிரதேசத்தில் அரச கட்டுப்பாடு இல்லாத பகுதிகளுக்கு உணவு மற்றும் மருந்து வகைகளை அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்குமாறு கோருவது.

இந்தகூட்டம் பற்றிய செய்தி ஒரு 29-3-99 உதயனிலும் வெளிவந்தது. (இ-க)

## மாநகர சபையில் கணனிப் பிரிவு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

யாழ். மாநகரசபையில் கணனிப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. யாழ். பல்கலைக்கழக கணனிப் பிரிவின் உதவியுடன் இந்தப் பிரிவு செயற்படுத்தப்படவுள்ளது.

இதற்கென முதற்கட்டமாக மூன்று கணனிகள் யாழ். மாநகர சபையினால் கொள்வனவு செய்யப்படவுள்ளன. [இ-5]

## திறந்துவைப்பு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

நீர்வேலி வடக்கு கமநல சேவை நிலையக் கட்டடம் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கத்தினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தின் உதவியுடன் 2 இலட்சத்து 60 ஆயிரம்ரூபா செலவில் இந்த கட்டடம் புனரமைப்புச் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அமெரிக்காவின்...

(முதலாம் பக்கத் தொடர்)

நேரப்படி நேற்று மாலை 7.00 மணி அளவில்— இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

யூகோஸ்லாவிய விமானங்கள் சிறிய அளவிலான இரு அணு குண்டுகளை மியாமி நகர் மீது வீசியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இந்தத் தாக்குதல்களின்போது பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் இதே எண்ணிக்கையானோர் அணுக் கதிர் வீச்சின் தாக்கத்துக்கு உள்ளாகி இருக்கலாம் என்றும் முதலில் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

ரஷ்யப் பிரதமர் பிரிமக்கோவ் நேற்று பெல்கிரேட் சென்று யூகோஸ்லாவிய ஜனாதிபதி மிலோசேவிக்குடன் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பினார். பிரிமக்கோவுடனான பேச்சுவார்த்தையின் போது நேட்டோ தனது தாக்குதல்களை நிறுத்தினால் கொசோவோ பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண மிலோசேவிக் இணக்கம் தெரிவித்தார். ஆனால் இதனை அமெரிக்காவும் பிரிட்டனும் நிராகரித்து விட்டன. இந்த அறிவிப்பு வெளிவந்து சற்றுநேரத்தில் யூகோஸ்லாவிய விமானங்கள் மியாமி மீது அணுகுண்டுத் தாக்குதலை நடத்தின.

அணுகுண்டுத் தாக்குதலை அடுத்து மியாமியில் பெரும் தீச்சுவாலைகள் எழுந்ததாகவும் அந்த நகரை புகைமூட்டங்கள் மறைத்துக் கொண்டிருப்பதாகவும் பி. பி. சி. தெரிவித்தது.

யூகோஸ்லாவியாவுக்கு பதிலடி கொடுப்பது குறித்து அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் இன்று நாட்டு மக்களுக்கு அறிவிப்பார் என்றும் பி. பி. சி. தெரிவித்தது. (இ)

## கறவைப் பசு திருட்டு ஐவர் கைதாகினர்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 1

புலோலி மேற்கு தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயில் பகுதியில் கடந்தவாரம் கறவைப் பசு ஒன்று திருடப்பட்டது தொடர்பாக ஐந்துபேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கன்று ஈன்று 5 நாள்களுக்குள் திருடப்பட்ட இந்த கறவைப் பசு தொடர்பாக உரிமையாளர் பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

விசாரணையில் ஈடுபட்ட பொலிஸார் பருத்தித்துறை சந்தைகோட்டம் பகுதியில் இறைச்சிக்காக உரிக்கப்பட்ட இந்தப் பசுவின் தோலைக் கண்டுபிடித்தனர். இதனை அடுத்து பருத்தித்துறைப் பகுதியில்இயங்கும் இறைச்சிக் கடை ஒன்றினைச் சேர்ந்த ஒருவர் உட்பட ஐந்துபேரை பொலிஸார்கைதுசெய்தனர்.

வீட்டுக்காரர் உறங்கும் வரை வீதியில் காத்திருந்து வளவில் கட்டியிருந்த கறவைப்பசுவையும், 5 கோழிகளையும் இவர்கள் திருடியதாகத் தெரிவிக்கப்படுகிறது. [இ 15]

## நூல்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஏப். 1

வலி. தென் மேற்குப் பிரதேச சபை எல்லைக்குள்ளிருக்கும் 30 சன சமூக நிலையங்களுக்கு பிரதேச சபைத் தலைவர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன், உப-தலைவர் சி. அன்ரன் ஆகியோரினால் நூல்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை இப்பகுதியில் உள்ள விவசாய சம்மேளனங்கள் ஊடாக ஆயிரம் பேருக்கு மரமுந்திரிகைக்கன்றுகளும் மேற்படி பிரதேசசபையினால் வழங்கப்பட்டன. [இ-5]

## முருங்கனில் தாக்குதல்!

மன்னார், ஏப்ரல் 1

மன்னார் முருங்கன் பிரதேச முன்னணிப் பாதுகாப்பு நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தினர் என்று படைத்தரப்புத் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலை முறியடித்து விட்டதாகவும்—

இதில் ஒரு பொலீஸார் உயிரிழந்தார் என்றும் மேலும் தெரிவித்தது. (இ-3-21)

## தேடுதல்

வடமராட்சி, ஏப். 1

ஏழாலைப் பகுதியை படையினர் நேற்று சுற்றிவளைத்து அங்கு தேடுதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-173)

## செயலகத்துக்கு லொறிகள்

யாழ். செயலகத்துக்கென மூன்று லொறிகள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

லங்கா முடித்த கப்பலிலே இந்த லொறிகள் எடுத்து வரப்பட்டன. (இ-5)

## பதவி...

[முதலாம் பக்கத் தொடர்]

தேசிய அமைப்பாளராக இ. இராமமூர்த்தியும் இருப்பார்.

அத்துடன் கட்சியின் செயலாளராக வன்னியசிங்கம் குணசீலனும், யாழ். மாவட்ட அமைப்பாளராக எஸ். சிவகுமாரும் பணிபுரிவர்.

புதிய கட்சி தொடர்பாக இராமேஸ்வரனும் இராமமூர்த்தியும் தேர்தல் ஆணையாளரை இன்று சந்திப்பர் என்று தெரிவிக்கப்பட்டது.

## உயிர்த்தெழுந்த ஞாயிறு இசை கானங்கள்

தென் இந்திய திருச்சபை,
யாழ் மறை மாவட்டத்தினால் நடத்தப்படும்

### இறைவனின் அன்பு

என்னும்
இசை கானங்கள், நாடகம்
உயிர்த்தெழுந்த ஞாயிறு தினமான
எதிர்வரும் 04-04-1999 பிற்பகல் 3 மணிக்கு
[புதிய நேரம்]

அருள்மிகு அறிவர் பேராயர்
எஸ். ஜெபநேசன்
அவர்கள் தலைமையில்
மருதனார்மடம்
கிறிஸ்தவ சேவா ஆச்சிரம வளாகத்தில்
நடைபெறும்.

அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் வரவை எதிர்பார்க்கும்

யாழ், மறை மாவட்டம்,
தென் இந்திய திருச்சபை.

[சி/6996]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசல்

**றிக்கோ கோப்பியை**

உடனுக்குடன் அரைத்துப் பெற்றுக்கொள்ள

**றிக்கோ RIECOH**

யாழ்ப்பாணம்.

குறிப்பு!- சுவைமிக்க பிரியாணிகளையும் பெற்றுக் கொள்ளலாம். (64368)



**புதுவருட**

**மலிவு விற்பனை**

எமது ஸ்தாபனத்தில் புதுவருடத்தை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் நன்மை கருதி

01 — 04 — 99 முதல் 13 — 04 — 99 வரை சில்வர், பான்சி பொருள்கள், புடைவைகள் பிளாஸ்ரிக் பொருள்கள் மலிவு விலையில் விற்பனையாகின்றன.

இன்றே வாருங்கள் ! வந்து வாங்குங்கள் !!

**தேவகி களஞ்சியம்**

76, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/6984)


## கண்ணீர் அஞ்சலி



**சின்னராசா சிவாகரன்**

[களஞ்சியப் பொறுப்பாளர், வி. எஸ். பி. குறூப்]

எமது நிறுவனத்தின் களஞ்சியப் பொறுப்பாளர் சின்னராசா சிவாகரன் அவர்களின் திடீர் மறைவுச் செய்திகேட்டு அதிர்ச்சி அடைகின்றோம், அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பங்காளரும், ஊழியர்களும்,
வி. எஸ். பி. குறூப்.

[சி/6990]

## மரண அறிவித்தல்

**செபமாலை நேசம்மா**

சென்.ஜேம்ஸ்வீதி, வசாவிளானைப் பிறப்பிடமாகவும் பிரதானவீதி, ஒடைக்கரையை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை நேசம்மா 31-03-99 புதன் கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற செபமாலையின் அன்பு மனைவியும் ஜெயசீலி (ஜெயராணி); காலஞ்சென்றவர்களான பற்றிமா (றஞ்சி), சறோசா ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோசேப் இரத்தினம், பாக்கியநாதன், பத்திநாதன் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற விஜிதா, பற்றீசியா (றெஜி), சதீஸ் (உரிமையாளர். யாழ். வோச் வேக்ஸ்), அமுதா, அனுராச், அனுஷா, யுவராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மாகிறேற்றின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 05, பிரதானவீதி, ஒடைக்கரையில் உள்ள அவரது இல்லத்தில் இருந்து இன்று (01-04-99) வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லடக்கத்திற்காக புனித மரியாள் சேமக் காலைக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
இ: சதீஸ் (பேரன்)
(யாழ். வோச் வேக்ஸ்)

இல. 05 ஒடைக்கரை வீதி,
யாழ்ப்பாணம். (64398)


இப்பத்திரிகை நியூஉதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01-04-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.


## 'லங்கா முடித்த' இன்று புறப்படும்

திருகோணமலை, ஏப்ரல் 1

திருகோணமலையில் இருந்து ஆயிரத்து 200 பயணிகளுடன் ''லங்காமுடித்த'' இன்றுகாங்கேசன்துறை நோக்கிப்புறப்பட விருக்கின்றது.

நாளை காங்கேசன்துறை வந்து சேரும் இந்தக் கப்பல், பயணிகளை இறக்கிவிட்டு கொழும்பு சென்று குடாநாட்டுக்கான உணவுப் பொருள்களை எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது. (இ-3)

### உயிலங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

துச் செல்வது தடைப்பட்டிருந்தது.

இந்த நிலை தொடர்பாக விடுதலைப் புலிகளுடனும் அரச அதிபர்கள் கலந்துரையாடி இருந்தனர்.

[இ-3-21-164]

### துப்பாக்கிச்...

(முதலாம் பக்கத் தொடர்)

தச் சம்பவம் இடம்பெற்றது.

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியைச் சேர்ந்த ரிச்சர்ட் புஸ்பராசா அன்ரனி [வயது 20] என்ற மீனவரே படுகாயமடைந்தவராவார்.

வலை இழுத்துக் கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சன்னம் பட்டு தாம்காயமடைந்ததாகவும் கூட இருந்தவர்களின் உதவியுடன் கரையை அடைந்ததாகவும் காயமடைந்தவரால் தெரிவிக்கப் பட்டது.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

[இ-5-15-739-173]


**எமது பிரமிட் வீடியோ CD வெளியீடுகள்!**

★ கோபுர வாசலிலே
★ ராஜகுமாரன்
★ Mr மெற்றாஸ்
★ நீதி
★ பந்தம்
★ எங்கிருந்தோ வந்தாள்
★ என் மகன்
★ ஆனந்தஜோதி
★ கோகுலத்தில் சீதை
★ காஞ்சி காமாட்சி
★ தேவியின் திருவிளையாடல்

**வீடியோ விமல்**

யாழ்ப்பாணம்.
(சி/6997)


### எளிமையான...

(முதலாம் பக்கத் தொடர்)

காலை 9-30 மணிக்குக் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்கள் மற்றும் ஆதரவாளர்களினால் நினைவுத் தூபிக்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தந்தை செல்வா நூற்றாண்டு யாழ். மாவட்ட தேசிய அவைச் செயலாளர் சூ.சே. குலநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர் மாவை சோ. சேனாதிராஜா, யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் க குணராஜா, யாழ். மாநகர சபைபிரதிமேயர் ந.ரவிராஜ், புளொட் மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா, தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கத் தலைவர் எஸ். சிவமகாராசா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாண கிறிஸ்தவ ஒன்றியத்தினால் தந்தை செல்வாவின் 101 ஆவது ஜனனதின ஆராதனை யாழ். பரியோவான் ஆலயத்தில் நேற்று நடத்தப்பட்டது.

இந்த ஆராதனையில் இரங்கலுரையை வண. பிதா டி. ஆர். அம்பலவாணரும் அருள் உரையை தென்னிந்திய திருச்சபை பேராயர் எஸ் ஜெபநேசனும் வண. பிதா ஜே.ஈ. ஜெயசீலனும் நிகழ்த்தினர்.

### மடுத்...

(முதலாம் பக்கத் தொடர்)

மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு செல்ல அனுமதி மறுக்கப்படுகின்றது.

மன்னாரிலோ, வவுனியாவிலோ தங்க அனுமதிஇல்லை.

மேற்கண்ட நடைமுறைகளால் மக்கள் அதிருப்தி நிலையில் உள்ளனர் — என்றார். (இ-3-21)

### யூக்கோ...

(முதலாம் பக்கத் தொடர்)

வலியுறுத்தும்படி அந்த மகஜரில் இலங்கை ஜனாதிபதி கேட்கப்பட்டிருந்தார்.

இந்தப் பேரணி முடிவில் அங்கு வைத்து அமெரிக்க தேசியக் கொடியும் அந்த நாட்டு நாணயங்களும் தீக்கிரையாக்கப்பட்டன.

## வாசகர்களே! கவனம்!!

இன்று ஏப்ரல் முதலாம் திகதி; ஏப்ரல் முட்டாள் தினம்.

வாசகர்களே கவனம்! உங்களுக்கு நெருங்கியவர்கள் உங்களை ஏமாற்ற முயற்சிப்பர் எச்சரிக்கையாக இருங்கள்.

உங்களில் ஒருவனான உதயனும் உங்களை ஏமாற்றி விடலாம்.

உங்களை ஏமாற்றும்முயற்சியில் ஒன்றுதான் முதல் பக்கத்தில் வெளியாகி உள்ள ''அமெரிக்காவின் மியாமி நகர் மீது யூகோ விமானம் அணு குண்டு வீச்சு'' என்ற செய்தியும், ''மல்லிகை வாசத்துடன் உதயன்'' என்ற செய்தியும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறோம்.

## கடத்தப்பட்ட பஸ் தீக்கிரை

இராணுவத்தினரால் அண்மையில் மீட்கப்பட்ட நவ்வி பகுதியில் இருந்து கடந்த திங்கட்கிழமை கடத்தப்பட்ட போக்குவரத்துச் சபை பஸ் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.

### செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

ணையை யாழ். நீதிமன்றத்தில் நடத்த நீதிவான் என். அருள்சாகரன் தயாராக இருந்த போதும்—

இந்த மனு மீதான விசாரணை இன்று கொழும்பு நீதிமன்றத்தில் இடம்பெறும் என்று சட்டமா அதிபர் திணைக்களத்தின் அரச சட்டவாதி ஜசந்த கொட்டா கொட தெரிவித்துள்ளார்.

இந்த மனு தொடர்பாக கொழும்பு நீதிமன்றத்தில் இன்று விசாரணை நடப்பது குறித்துத் தமக்குத் தகவல் எதுவும் கிடைக்கவில்லை என்று நீதிவான் அருள்சாகரன் நேற்றிரவு தெரிவித்தார். (-3)


**மணி றோணியோ**

**(MANEIE RONEO)**

சகல விதமான றோணியோ வேலைகளும் குறித்த காலத்தில் மிகவும் குறைந்த விலையில் செய்து கொடுக்கப்படும்.

தொடர்பு:-
சிவநெறி கல்வி நிலையம்
(ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகில்)

417, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். [64336]


உ

ஓம் முருகன் துணை

## திருமண அழைப்பு

♥*♥*♥*♥*♥*♥*♥*♥*♥*♥

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் பங்குனித் திங்கள் 20 ஆம் நாள் (03 - 04 - 99) சனிக்கிழமை அமிர்த சித்த யோகமும் சுவாதி நட்சத்திரமும் கூடிய சுபயோக சுபதினத்தன்று பகல் 11-17 மணி முதல் 1-36 மணிவரையுள்ள மிதுனலக்கின சுபமுகூர்த்த நல் வேளையில்

| எமது சிரேஷ்ட புத்திரன் | எமது ஏக புத்திரி |
| --- | --- |
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| **ஓங்காரகுமரன்** | **சுதர்மதி** |
| (குமரன்) | (சுதா) |

ஆகிய இருவருக்கும் திருமணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு கொழும்பு-13, இல. 34, விவேகானந்த மேடு, விவேகானந்த மண்டபத்தில் திருமண நிகழ்வு இடம்பெறும். இந்த வைபவத்துக்கு தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

திருமதி ப. யோகீஸ்வரன்
திரு திருமதி கனகசபாபதி குடும்பம்
79/3, W.A. சில்வா மாவத்தை,
கொழும்பு - 6.

திரு. திருமதி சொக்கநாதன்
20, ஆதர்ஸ் பிளேஸ்,
கொழும்பு - 4.

(சி/6995)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org